விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 கார்த்திகை 25 ராபி அவ் 27 இதழ் 303
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 10-12-1985

# அரசியல் கொலை அதிகரிப்பு!

## கூட்டணி கண்டனம்

[சென்னை]

''தென்னுபிரிக்கா, மத்திய அமெரிக்கா போன்ற நாடுகளில் அரசியல் கைதிகள் கொலைசெய்யப்படும் தொகையைக்காட்டிலும் இலங்கையில் இளம் அரசியல் கைதிகள் கொலைசெய்யப்படுவது அதிகரித்துள்ளது'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியற் குழு (பொலிட்பீரோ) நேற்று சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கண்டனம் தெரிவித்துள்ளது.

''இலங்கையில் போர்நிறுத்த உடன்பாடு அமுலிலுள்ள போதிலும் இராணுவ முகாம்களில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுக் கொடுமைப்படுத்தப்பட்டு வருகிறார்கள். இம்மாதிரியான அரசியல் கொலைகளுக்கு,

(5ம் பக்கம் பார்க்க)

# ● இடையூறுகள் தொடர்ந்து ஏற்பட்டால்

# வட, கிழக்கு ரயில்சேவை எந்நேரமும் நிறுத்தலாம்!

## அமைச்சர் மொகமட் அறிவிப்பு

(கொழும்பு)

**''வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கான ரயில் சேவைகளுக்கு இடையூறுகள் விளைவிக்கப்பட்டால் மேற்படி ரயில் சேவைகளை எந்த நேரத்திலும் நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்படலாம்! இத்தகைய நிலைமை வராமல் இந்தப் பகுதிகளுக்கான ரயில்சேவைகள் தொடர்ந்து நடைபெற பொதுமக்கள் தமது முழுமையான ஒத்துழைப்பைத் தரவேண்டும்'' என்று போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். மொகமட் நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

போக்குவரத்து அமைச்சுக்கான வரவு-செலவு திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தின் போது பதிலளித்துப் பேசிய அமைச்சர் அல்ஹாஜ் மொகமட் மேலும் கூறியதாவது:

'வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கான ரயில் சேவைகள் பாதுகாப்புக் கருதி தற்போது பகல் நேரத்திலேயே நடைபெறுகிறது. இரவு ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. இப்பகுதிகளுக்கான ரயில் சேவையைப் பொறுத்தவரையில் ரயில்களிலும் ரயில் நிலையங்களிலும் பல கொள்ளைகள் இடம் பெற்றுள்ளன.

'யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் சிபார்சின் பேரில் காசுக்கட்டளை மூலம் ரயில் பயணச் சீட்டுக்களை வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த முறையினால் பொது மக்களுக்கு சில அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன. ரயில்வே ஊழியர்களும் கஷ்டமான நிலைமையிலேயே கடமையாற்றுகின்றனர். ஆள் கடத்தல், பயமுறுத்தல் சித்திரவதைகள் போன்ற செயல்

(5ம் பக்கம் பார்க்க)

# பாக். ஜனாதிபதி இன்று விஜயம்

[கொழும்பு]

பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா வுல் ஹக் ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று பகல் கொழும்பு வருகிறார்.

ஜனாதிபதி ஸியா வுல் ஹக்கின் விஜயத்தைத் தொடர்ந்து கொழும்பு நகரில் போக்குவரத்துகள் பல பாதைகளில் தடை செய்யப்பட்டுள்ளன.

# ''நியாயமான உரிமைக்கு உறுதியுடன் போராடவேண்டும்''

## இந்திய உயர் ஸ்தானிகர் கருத்து

[கொழும்பு]

''மக்கள் தமது சட்டரீதியான உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடுவதை எவரும் தடுத்து நிறுத்தமுடியாது. நாகரிகம் அடைந்த இன்றைய உலகில் வாழும் மக்கள் அரசியலிலிருந்து விலகி வாழ முடியாது'' என்று இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என். டிக்ஸிற் கருத்து வெளியிட்டுள்ளார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்திற்கு தமிழ்நாடு மநில அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ள 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான 4,000 நூல்களைக் கையளிக்கும் வைபவம் சங்கத் தலைவர் திரு. நா. மாணிக்க இடைக்காடர் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

நூல்களைத் தமிழ்நாடுமாநில

(5-ம் பக்கம் பார்க்க)

# நாவற்குழிச் சம்பவம்:

## துப்பாக்கிப் பிரயோகம்; குண்டுவெடிப்பு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் நேற்றுக் காலை ஆயுதப்படையினருக்கும் இனந்தெரியாதவர்களுக்கும் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து அப்பாதையால் போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டது.

இச்சம்பவத்தில் சிலர் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது. சிலர் கைதுசெய்யப்பட்டனர்.

ஆயுதப்படையினரும், இனந்தெரியாதவர்களும் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும், இடையிடையே குண்டு வெடிச்சத்தங்களும் கேட்டதாகவும் இதனால் அப்பகுதி எங்கும் பெரும் பதற்றம் ஏற்பட்டதாகவும் அறியப்படுகிறது.

சுமார் ஒரு மணிநேரம் துப்பாக்கிச் சமர் நடந்தாம். இதனால் 'உத்தரதேவி' நேற்றுக்காலை ஒரு மணி 20 நிமிடம் தாமதித்தே யாழ். ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து முகாமிலிருந்து ஒரு பக்கம் செம்மணிவரையும், மறு பக்கம் நாவற்குழிச் சந்திவரை

(5ம் பக்கம்பார்க்க)

# கவசவாகனம் மோதி லொறி சேதம்!

[யாழ்ப்பாணம்]

வீதி ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த விறகு லொறி ஒன்றுடன் கவசவாகனம் மோதியதால் லொறிச் சாரதி படுகாயமடைந்தார்! லொறியின் என்ஜின் பகுதியும் பலத்த சேதம் அடைந்தது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நாகலிங்கம் சதாசிவம் (36 வயது) என்பவரே காயமடைந்தவராவார்.

ஆனையிறவு உப்பளத்துக்கு அருகாமையில் உள்ள வீதியில்

### சாரதி படுகாயம்

நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றது. காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

[மா]

### 4 இளைஞர்களும் விடுவிக்கப்படவில்லை

[வவனியா]

ஓமந்தையிலுள்ள கோழியகுளத்தில் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்கள் விடுவிக்கப்படாதது குறித்து அவர்களின் பெற்றோர் வவனியா பிரஜைகள் குழுவிடம் புகார் செய்துள்ளனர். (மா)

# வவனியாவில் மீண்டும் 2 இளைஞர்கள் கைது!

[வவனியா]

இறம்பைக்குளத்தைச் சேர்ந்த 18 வயதுள்ள இரு இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனபாலன் வசந்தன், ராமசாமி செல்வராசா ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இருஇளைஞர்களும் கைது செய்யப்பட்டது சம்பந்தமாகஅவர்களின் பெற்றோர் வவனியா பிரஜைகள் குழுவிடம் புகார் செய்துள்ளனர்.

## சோதனை

வவனியா நகரம் நேற்று ஆயுதப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு கடுமையான சோதனை நடாத்தப்பட்டது

# ரூ. 45 ஆயிரம் கொள்ளை

[மட்டக்களப்பு]

தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவரின் தேங்காய் லொறியில் 45 ஆயிரம் ரூபா கொள்ளைஅடிக்கப்பட்டுள்ளது.

நாவற்குடாவில் நேற்றிரவு இக்கொள்ளைச்சம்பவம் இடம் பெற்றது. (மா)

# இனப்பிரச்னை: வாஷிங்டன் மாநாடு கருத்து

[வாஷிங்டன்]

இலங்கை இனப் பிரச்னை குறித்து வாஷிங்டனில் நடைபெற்ற இரண்டு நாள் மாநாடு: இந்தப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பது பற்றிய விஷயத்தில் பொதுக் கருத்தை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் இனப்பிரச்னைக்கு அதிகாரத்தைப் பரவலாக்குவதுதான் ஒரே வழியென்றும் இந்த மாநாடு யோசனை தெரிவித்துள்ளது.

பூசல்களைச் சமாளிப்பது குறித்த சர்வதேச வளர்ச்சிக்கான மையமும், அமெரிக்காவின் மரிடான் பல்கலைக்கழகத்தின் கீழான இன ஆய்வுகள் குறித்த மையமும் இந்த மாநாட்டுக்கு கூட்டாக ஏற்பாடு செய்திருந்தது. [து]

# கிளிநொச்சியில் 10 இளைஞர்கள் கைது

[கிளிநொச்சி]

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் மாலை சுமார் பத்து இளைஞர்கள் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி பொலிஸ் - இராணுவ கூட்டு முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பழைய பஸ் நிலையத்தில் அமைந்துள்ள 'வீடியோ' படத் தியேட்டரில் படம் பார்த்துக் கொண்டிருந்தசிலரும் கைதாகியுள்ளனர். சுமார் 7 வயது மதிக்கத்தக்க சிறுமி ஒருவரும் விசாரணைக்காக இராணுவ முகாமிற்கு கொண்டுசெல்லப்பட்டுபின்னர் விடுவிக்கப்பட்டதாக கூறப்பட்டது.

கைதான இளைஞர்களின் பெற்றோர் பிரஜைகள் குழுத் தலைவரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

# வரிவிளம்பரம்

## தேவை

G. C. E. A/L தூய, பிரயோக கணிதத்தில் Tuition தேவை. கே தனசேகரம், வேளாவை, அளவெட்டி. 2254

---

றெமிங்டன் New Key Board எரிக்கா Key Board தமிழ் தட்டச்சில் அடிக்கக் கூடியவர் தேவை. நிர்வாகி- சங்கர், J. E. C. மேல்மாடி, (சாந்தி சினிமா முன்), யாழ்ப்பாணம். 2125

---

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வியாபார நிலையத்திற்கு வியாபாரஅனுபவமுள்ள பெண்கள் உடன் தேவை. பிற்பகல் 1மணி தொடக்கம் 4மணி வரை நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். சத்யா றேடேர்ஸ், 16, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம். 2261

---

M.B.B. S, அல்லது R.M.P. டாக்டர் ஒருவர் 14ந் திகதி தொடக்கம் 17ந் திக்திவரை Relief Duty வேலை செய்வதற்கு தேவை. வேலை செய்ய விருப்பம் உள்ளவர்கள் உடனடியாக 13ந் திகதிக்கு முன்னர் கடிதம்மூலமோ அல்லது நேரடியாகவோ தொடர்பு கொள்ளவும். டாக்டர் G. குமரேந்திரன், மெடிக்கல் கிளினிக், இல. 88, பருத்தித்துறை வீதி, நல்லூர், கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 2250

---

இறைச்சிக்கு கோழி தேவை. இனங்களுக்கு ஏற்றபடி கிலோ 30/- முதல் 38/- வரை கொள்முதல் செய்யப்படும். விபரங்களுக்கு தொடர்பு: ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (2157)

## விற்பனைக்கு

மூளாய் பிள்ளையார் கோவிலுக்கு பின்புறமாக 52½ பரப்பு வயற்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. இராமலிங்கம் சட்டத்தரணி, மல்லாகம். 2269

## சேவை

தட்டச்சு உரிமையாளரே! ஓர் நற்செய்தி! உங்கள் நிறுவனத்தில், வீட்டில் தட்டச்சு யந்திரங்கள் பழுதாகிவிட்டதா? இன்றே உடன் தொடர்புகொள்க: Q.T.R.C. சாந்தி சினிமா முன்பாக, J. E. C. மேல்மாடி, யாழ்ப்பாணம். (2119)

## தவறிவிட்டது

எனது 14975 Bank A/C புத்தகமும், தேசிய அடையாள அட்டையும் காரைநகர் மினிபஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். திருமதி க. சண்முகலிங்கம், இலகடி, சங்கானை. 2266

---

கலர் பிலிம் களுக்கு
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ

---

இலங்கை பல்கலைக்கழக

### வெளிவாரித் தேர்வுக்கான

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

**கல்வியாண்டு 86/87**

கலைமாணி (G. A. Q) படிப்பை மேற்கொள்பவர்களுக்கான பதிவுகள், அனுமதிகள் என்பவற்றை இங்கு செய்துகொள்ளலாம்.

குறிப்பு:
G. C. E. (A/L) 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விபரங்களுக்கு:

### JAFFNA EDUCATION CENTRF

பட்டப்படிப்புக்கள் பகுதி (மேல்மாடி),
சாந்தி சினிமா முன்பாக, யாழ்ப்பாணம்.

(2256)

---

## விக்னு டியூசன் சென்றர்

**52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்**

கலை, வர்த்தக வகுப்புகளுக்கு
தனித்துவம் வாய்ந்த ஒரேநிறுவனம்

### A/L 86 மீட்டல்

புதிய வகுப்புகள்
**சனி, ஞாயிறு வகுப்புக்கள்**
ஆரம்பம்: 14-12-85
காலை 8-00 மணி

### DAY CLASSES

ஆரம்பம்: 16-12-85
காலை 8-00 மணி

முக்கிய குறிப்பு:

1. கலை, வர்த்தக பிரபல ஆசிரியர்கள் ஒன்றிணைந்து நடத்தும் நிறுவனம்.
2. வடமாகாணத்தில் மீட்டல் வகுப்புக்கள் இந்நிறுவனத்தில் மட்டுமே நடைபெறும்.

---

## 31-வது நாள் நினைவஞ்சலி

**திரு. கந்தப்பு வீரசிங்கம்**



படைப்பு:
03-04-1959

அழிப்பு;
10-11-1985

உன் அன்பான புன்சிரிப்பாலும், பண்பான பேச்சாலும், பணிவான நடத்தைகளாலும் எம் இதயம் கவர்ந்த அன்பின் தெய்வமே எங்கு சென்றாய். போகும்போது மீளமாட்டேன் என ஒரு வார்த்தை தான் சொன்னாயா, ஐயோ உன்னைப் பதைபதைக்கக் கொன்றுவிட்டார்களே. காலமெல்லாம் எங்களுக்கு வழிகாட்டியாக இருப்பாயென இருந்தோம். காலன் உன்னை பாதி வயதில் பறித்தானே. நீ சென்றாலும் நீ விட்டுச் சென்ற பாசம் எங்களை விட்டு ஒருபோதும் நீங்காது. உன் ஆத்மா சாந்தியடையட்டும்.

மனைவி, தகப்பன், தாய், மாமன், மாமி,
சகோதரர்கள், மைத்துனர், மைத்துனிமார்,
அண்ணான், பெருமக்கள்.

12-ம் வட்டாரம், புங்குடுதீவு. (2123)

---

## அகதிகளுக்கு உதவி

(வேலணை)

எண்ணாயிரம் ரூபாவுக்கும் மேலான பெறுமதியுள்ள உணவு, உடுபுடவை வகைகளை புங்குடுதீவு மாணவர் மன்றம் அகதிகளுக்கு வழங்கியுள்ளது.

மாணவர் மன்ற கலை விழா மூலம் சேகரிக்கப்பட்ட இத்தொகை, சங்கிலியன் புனர்வாழ்வுக் கழக அகதிகளுக்கும் தமிழ் மகளிர் அவை அகதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மாணவர் மன்றச் செயலாளர் திரு. இ. இராசலிங்கம் தலைமையி சென்ற மாணவர் குழு பொருட்களை நேரடியாக கையளித்தது.

## மாணவர்கள் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் சில இடங்களில் இரவு நேரங்களில் மின்சார வெட்டு நிகழ்வதால் ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சை எழுதிக்கொண்டிருக்கும் மாணவர்கள் பாதிப்படைகிறார்கள்! [ஐ]

---

## 20-வது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி அனுசியா கந்தையா

அல்வாய், மாலிச்சந்தியில் வசிக்கும் சிவாசுயா தனது 20-வது பிறந்தநாளை 10-12-85 அன்று அவரது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, தங்கை, அண்ணன்மார், சிவநாதன் அத்தான், ரமேஷ் குடும்பத்தினர், கஜேந்திரன் குடும்பத்தினரும் மற்றும் உறவினர், நண்பர்களும் வாழ்த்துகிறார்கள். (2141)

---

## விற்பனவு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஒரு கடை
காலியான நிலையில் வங்கிகளுக்கு அண்மையில்.

## தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள்
நல்ல குடிதண்ணீர் வசதியுடன் ஆகக்குறைந்த
2 - 5 நிலப்பரப்புள்ள ஆதனம்.

**வருடமொன்றுக்கு உங்கள் மூலதனத்துக்கு**
**24 வீதம் வட்டிகொடுக்கப்படும்**

விபரங்களுக்கு:-

### J. P. T Ltd.,

3, நவீன சந்தை (மேல்மாடி).
யாழ்ப்பாணம்.

---

Technician Certifciate Course
in

## REFRIGERATION & AIR - CONDITIONING

(6 Months Weekend Course with Theory and Practicals)

செய்முறைப் பயிற்சியுடனான இப்பயிற்சிநெறி
ஆங்கிலத்திலும் தமிழிலும்
கலந்து நடாத்தப்படும்.

குறைந்த கல்வித்தகைமை: G. C. E. (O/L) விஞ்ஞானம், ஆங்கிலம் உட்பட குறைந்தது 6 பாடங்களில் சாதாரண சித்தி.

கட்டணம்: Rs. 850/- (Full Course Fee) தவணை முறையிலும் கட்டணம் செலுத்தலாம்.

LECTURER-IN-CHARGE: Asscciate Member of the Institute of Refrigeration - U. K. விசேட தகைமை பெற்ற குளிர்சாதனவியல் பொறியியலாளர்.

**ஆரம்பம்: 4-1-1986**

**விண்ணப்பங்கள் முடிவு திகதி: 31-12-1985**

விண்ணப்பப் பத்திரங்களும், இப்பயிற்சிநெறியைப் பற்றிய முழு விபரங்கள் அடங்கிய குறிப்புத்தாள்களும் எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

DIRECTOR (Training Division),

### Refrigeration Engineering Services

37/6, ஸ்ரான்லி வீதி,
(மஸ்கன் கம்பனி அருகாமையில்)
யாழ்ப்பாணம். (2271)



# 'சாக் அமைப்பிலுள்ள நாடுகளுக்கு சமமான உரிமையுண்டு

## இந்தியா கருத்து

## தலைமைப் பதவியை ஏற்க ராஜீவ் மறுப்பு

(டாக்கா)

**டாக்காவில் நடைபெற்ற தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புச் சங்கத்தின் (South Asian Association for Regilonal Corporation) (சாக்) முதலாவது மகாநாட்டில் ஒவ்வொருநாடும் தத்தமது கருத்துக்களை சமமான விதத்தில் வெளியிடலாம் எனவும், இதில் முடிவுகள் விரைவாகவும், முழுமனதுடனும் எடுக்கப்படுமென்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி தெரிவித்துள்ளார்.**

டாக்காவில் நடைபெற்ற 'சாக்' உச்சி மகாநாட்டின இறுதிக் கூட்டத்தில் நேற்று முன்தினம்உரையாற்றிய திரு. ராஜீவ்காந்தி; ''மிக உயரிய நோக்கங்களுடன் நாம் இங்கு வந்து சேர்ந்தோம். புதியதோர் நம்பிக்கை உதயமாவதையும் பார்த்துவிட்டோம்'' என்றும் கூறினர்.

'சாக் நாடுகளின் தலைமைப் பொறுப்பை திரு. ராஜீவ் காந்தி மேற்கொள்ள வேண்டும்' என்று, ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியது பற்றி கருத்துத்தெரிவிக்குமாறு செய்தியாளர்கள்கேட்டபோது; 'அது முடியாது' என்று இந்தியப்பிரதமர் திரு, ராஜீவ்காந்தி பதிலளித்தார்.

'பெரியதோ, சிறியதோ 'சாக்'கிலுள்ளநாடுகள் அனைத்துமே சமமானவை என்பதால் தாம் தலைமைப் பொறுப்பை ஏற்பதென்ற பேச்சுக்கே இடமில்லை' என்று கூறினர்.

'சாக்' உச்சி மகாநாட்டில் ஏழு தலைவர்களின் மனநிலையும் ஆக்கபூர்வமான விதத்தில், அனுகூலமான திசையில் இருந்ததாய் சுட்டிக்காட்டிய இந்தியப்பிரதமர், இடையூறுகளைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாக தீர்வு ஒன்றை எட்டுவதிலேயே அனைவரும் ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்று கூறினர்.

பயங்கரவாதங்களின்அம்சங்கள் பற்றியும்; போதை வஸ்துக்களின் கள்ள வியாபாரம் பற்றியும் ஆராய்வதற்காக உயர்நிலைக்கமிட்டிகளைஅமைப்பதென உச்சி மகாநாட்டின் முடிவு பற்றி திரு. ராஜீவ் காந்தி குறிப்பிடுகையில், சிக்கலான ஒரு விடயம் என்றும் அதனுடைய நுட்பஅம்சங்கள் அனைத்துமே கவனிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியாவுல்ஹக் உரையாற்றுகையில், இந்தப் பிராந்திய மக்களின் சமூகபொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவது என்ற மனஉறுதியின் பரிணமிப்பைத்தான் இந்த உச்சிமகாநாடு பிரதிபலிக்கிறது என்ருர்.

'சாக்'சங்கம் அமைக்கப்பட்டுள்ளதை வரவேற்றுஇலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, மாலைதீவு ஜனாதிபதி ஜஹுப் அப்துல் கையூம், பூட்டான் மன்னர் ஜிக்மிசிங்கி வாங்சக் ஆகியோர் பேசினர்கள்.

தெற்காசிய பிராந்தியஒத்துழைப்புச்சங்கம் அமைக்கப்பட்டதை அறிவிப்பதான சாசனம் ஒன்று ஆமோதிக்கப்படுவதை அடுத்து டாக்காவில் 'சாக்' உச்சி மகாநாடு நேற்று முன்தினம் மாலை முடிவடைந்தது.

அணு ஆயுதங்களின் சேனை, உற்பத்தி மற்றும் அவற்றைப்பிரயோகிப்பதான செயல்களை முழுமையான அளவுக்கு நிறுத்திவிட வழிவகுக்கும். விரிவான அணுஆயுத சோதனைகள் தடை ஒப்பந்தம் குறித்து உடனே பேச்சுவார்த்தைகள் நடத்திட வேண்டும், என்ற அணு ஆயுதப்தடைபிரகடனத்தையும் ஏழு நாட்டு அரசத் தலைவர்களும் ஆமோதித்தார்கள். (பி)

உலகச் செய்திகள்

## 'ஒபெக்'கின் நிலையை வலுப்படுத்த முயற்சி

(ஜெனிவா)

எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் ஸ்தாபனம் ஒபெக்கின் உறுப்பு நாடுகளின்எண்ணெய் வளத்துறை அமைச்சர்கள் உலக எண்ணெய்ச் சந்தையில் 'ஒபெக்'கின் பங்கை நிலைநாட்டுவதற்கான திட்டம் பற்றிய உடன்பாடு ஒன்றினை உருவாக்கிட ஆறுஉறுப்பினர்கொண்ட குழு ஒன்றினை அமைப்பதென ஜெனிவா கூட்டத்தில் முடிவெடுத்துள்ளார்கள்.

குவைத், ஐக்கிய அரபுக் குடியரசு. அல்ஜீரியா, ஈரான், ஈராக், வெனிசுவெலா ஆகிய நாடுகள் இந்தக்குழுவில் இடம் பெறுகின்றன. சவூதி அரேபியா இந்தக்குழுவில் இடம் பெற மறுத்துவிட்டது. சர்வதேச எண்ணெய் சந்தையில் தம்முடைய பங்கை கணக்கில் எடுத்து தனது உண்மையான உற்பத்தி அளவை நிர்ணயிக்கவுள்ளது. (பி)

## வீடமைப்புத்திட்டம்: யாழ்ப்பாணம்: ரூ. 30 லட்சம்

[கொழும்பு]

''வீடமைப்புத் திட்டவேலைகளை மேற்கொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு 1986.ல் 30 லட்சம் ரூபாவும், மட்டக்களப்புக்கு பன்னிரண்டரை லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது'' என்று கொழும்பு மாவட்ட அமைச்சர் திரு. வீரசிங்கமல்லிமாராய்ச்சி பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

வீடமைப்புத் திட்டவேலைகளைப் பொறுத்தவரையில் நாட்டின் எப்பகுதிகளையும் புறக்கணிக்காது சகல பகுதிகளையும் அபிவிருத்தி செய்வதே தமது நோக்கம்' என்றும் அவர் சொன்னர். [ய]

## ''ரயில் சேவையில் கைவைக்க வேண்டாம்!''

### பிரஜைகள் குழு கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

ரயில் சேவையைப் பாதிக்கக்கூடிய எந்த நடவடிக்கையையும் எடுக்கவேண்டாமென்று தமிழ் மக்களின் நலனின் பேரால் பருத்தித்துறை பிரஜைகள் குழுவினர் அனைவருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பருத்தித்துறை பிரஜைகள் குழு செயலாளர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் விடுத்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

''யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவையை முற்றாக நிறுத்திவிட அரசு யோசிப்பதாகக் கூறப்படுகிறது. தீவிரவாதிகள் தொடர்ச்சியாக ஏற்படுத்திவரும் நட்டமே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது. ரயில்சேவை நிறுத்தப்படும்போது கொழும்புக்கும் ஏனைய இடங்களுக்கும் பயணம் செய்வது பெரிதும் பாதிக்கப்படுகின்றது. தனியார் பஸ்சேவை இரட்டிப்புப் பணம் பெற்றுக் கொழும்புச் சேவையை நடத்துகின்றது. எது எப்படியிருப்பினும் ரயில்சேவை பாதிப்புற்ருல் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் போக்குவரத்து உட்படப்பெரும் பாதிப்பு ஏற்படும். எல்லாவற்றுக்கும் மேலாக பெரும் பாதிப்பைத் தரக்கூடிய வகையில் பஸ்கட்டணம் இரட்டிப்புச் செய்யப்படும். ரயில் சேவைக்குப் பாதிப்பு ஏற்படுத்துவோர் சந்தேகமில்லாது சுயநலத் துரோகிகள் என்று வரலாற்றில் இடம் பெறுவர். (க)

## சீனக்கப்பல் இலங்கை வருகிறது

(பீக்கிங்)

தென்னசிய நாடுகளுக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு சீன மக்கள் விடுதலைச்சேனை கடற்படையின் இருகப்பல்கள் ஷங்காய் துறைமுகத்திலிருந்து புறப்பட்டுள்ளன.

மக்கள் சீனக்குடியரசு 1949ம் உதயமானதின்பின்னர் மக்கள் விடுதலைச்சேனையைச் சேர்ந்த கடற்படைக் கப்பல்கள் இவ்வாறு வெளிநாடுகளுக்கு நட்பு விஜயம் மேற்கொள்வது இதுவே முதல்தடவை.

பாகிஸ்தான், பங்களாதேஷ் இலங்கை ஆகிய நாடுகளுக்கு மேற்கொள்ளப்படும் இவ்விஜயம் குறித்த நாடுகளின் அழைப்பின் பேரிலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

## சாயி அற்புதம்!

[புட்டபர்த்தி]

ஸ்ரீசத்தியசாயி பாபாவின் 60-வது பிறந்த தினத்தையொட்டி இம்முறை பகவான் எந்த அற்புதமும் நிகழ்த்தவில்லை. ஆனால் கூடியிருந்தவர்களுக்கு பக்தர்களுக்கெல்லாம் பகவான் அன்போடு மூன்றுவேளை உணவு கொடுத்தார்.

பதின்நான்காம் திகதி முதல், 23-ம் திகதி வரை புட்டபர்த்தியில் குழுமியிருந்த பக்தர்கள் இருபத்தாறு லட்சத்து ஐம்பதினாயிரம் வரை இருந்தனர். இவர்கள் அனைவருக்கும்10 நாட்களுக்கு வேளாவேளைக்கு மூன்று நேர உணவு உணவு வழங்கப்பட்டது.

இதில் இலங்கையில் இருந்து போனவர்கள் ஆயிரம் பேர். இதில் 300 பேர்கள் சிங்களவர்கள். [கெ]

## தமிழர்விடுதலைக்கூட்டணியின் பொலிட்பீரோ கூட்டம்

(சென்னை)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் (பொலிட்பீரோ) நேற்று முன்தினம் சென்னையில் கூடி இலங்கையின் தற்போதய நிலை குறித்து ஆரரய்ந்தது.

இந்த முன்னணியின் தலைவர்களுக்கும், இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரிக்கும் இடையே அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் இப்போது லண்டனில் உள்ளதால் திரு. ரொமேஷ் பண்டாரியுடன் பேச்சுவார்தைகள் நடத்திய போது முன்வைக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலங்கை இனப்பிரச்னைக்கான மாற்று யோசனைகள் குறித்து ஆராயப்படவில்லை என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (பி)

## அஸாம் சட்டசபை தேர்தலில் 1234 பேர் போட்டி!

(புதுடில்லி)

அஸாம் மாநில சட்டசபை தொகுதிகளுக்கான தேர்தல் இம்மாதம் 16ந் திகதி நடைபெறவுள்ளது. ஏழு வருடகாலத்துக்குள் நடக்கவிருக்கும் சட்டசபைக்கான மூன்ருவது தேர்தல் இதுவாகும்.

125 சட்டசபை தொகுதிகளை உள்ளடக்கிய அஸாம் மாநிலத்தில் இந்த 125 தொகுதிகளிலும் என்றுமே இல்லாத வகையில் அதிக எண்ணிக்கையாக 1234 வேட்பாளர்கள் போட்டியிடுவது முக்கிய அம்சமாக அமைந்துள்ளது. சகல தொகுதிகளிலும் பலமுனைப் போட்டி நிலவுகிறது.

வேட்பாளர் ஒருவர் மரணமானதைத் தொடர்ந்து ஒரு தொகுதியைத் தவிர்த்து ஏனைய சகல தொகுதிகளிலும் திட்டமிட்டபடி தேர்தல் நடைபெறுமென்று கூறப்பட்டது, (ரா)

## திருட்டு அம்பலம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் திருட்டு சம்பவம் தொடர்பாக மூன்று பேர் இளைஞர் குழு ஒன்றினல் விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

எரிபொருள் நிலையம் ஒன்றின் யந்திர உதிரிப்பாகம் ஒன்றைத் திருடியபோதே இவர்கள், இளைஞர் குழுவினரிடம் சிக்கியதாக கூறப்படுகிறது. இந்த எரிபொருள் நிலையத்தில், முன்னர் ஐந்து வேறு வகையான உதிரிப்பாகங்களும் திருட்டுப்போயுள்ளதாக கூறப்படுகிறது (க)

## கண்காணிப்புக் குழுமுன் ஏழு பேர் சாட்சியம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கு விஜயம் செய்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்பாக 7 பேர் மட்டும சாட்சியம் அளித்ததாகவும், நூற்றுக்கு மேற்பட்டோர் சாட்சியமளிக்கக் காத்திருந்தும், போதிய நேரமின்மையால் சாட்சியமளிக்க முடியாதுபோய்விட்டதாகவும் கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் தலைவர் டாக்டர் கே. சுப்பையா, செயலாளர் சட்டத்தரணி ரி. ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் பிரஜைகள் குழுவின் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டனர்.

திருநகர் சம்பவங்கள் பற்றி விசாரணை மேற்கொள்ளவந்த பிரஸ்தாப குழுவினரிடம் மாவட்டத்தின் பல இடங்களிலும் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்தும், விசாரிக்குமாறும் சேதமடைந்த பஸ் நிலையம், பொதுச் சந்தை, பட்டினசபைமண்டபம், நூலகம், நகர மண்டபம், அரச அலுவலகம் முதலானவற்றையும் பார்வையிடவேண்டும் என்றும் வலியுறுத்தினும் என்று டாக்டர் சுப்பையா தெரிவித்தார்.''

''பொலிஸ் நிலையம் இராணுவ முகாமாக மாற்றப்பட்டதற்குப் பலத்த ஆட்சேபம் தெரிவித்ததுடன், பொது மக்களின் நன்மை கருதிப்

(7ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

உன்வறுமை வழிப்பிரயாணிபோல் வரும், உன் தேவையோ ஆயுத பாணியாக வரும்.

— பைபிள்.

# நமது நோக்கு

## மனித உரிமைகள்

உயிர் அல்ல முக்கியம். உயிரிலும் மேலான உரிமையே முக்கியம் என்று எல்லோரும் சொல்லி வருகின்றனர்.

சொல்வது யார்க்கும் எளிது. சொல்லிய வண்ணம் செய்வது அரிது. இவ்வித அரியசெயலை இன்று செய்பவர் தாங்களே என்று தமிழ்ப் போராளிகள் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள்.

வெற்றி பெற்றால்விடுதலை அல்லது வீர மரணம் என்பது அவர்களின் திடசங்கற்பம் என்பது செயலில் தெரிகிறது.

இந்தத் தத்துவத்தை அவர்கள் மட்டுமல்ல, இங்கு கொல்லப்படும் அப்பாவித் தமிழ் மக்கள் தமது இரத்தத்தில் எழுதிவிட்டுப் போயிருக்கிறார்கள் என்று கூறலாம்.

இதுதான் முற்றும் உண்மை முடிந்த முடிவு என்று கொள்ளாது வேறொருவகையிற் பார்ப்பது அவசியம்.

இந்தச் சிறுநாட்டில் இவ்விரு சமூகங்களும் இரத்தக் களரியைத் தொடராது, சமத்துவ அடிப்படையில் வாழ வழிகாண முடியாதா?

இந்த வினாவை இலங்கை அரசுக்கு விடுத்தால் அது நன்றாக முடியுமென்று சொல்கிறது. இனப்பிரச்னை தீர்ப்பது பிரமாதமல்ல; ஆனால்பயங்கரவாதம் என்ற பெருமழையில் வெளியே உலாவ முடியாத நிலையில் தீர்வுக்கு வழி ஏது என்ற வினாவை முன்வைக்கிறது.

தமிழ் இளைஞர் தொடங்கிய, தொடர்கின்ற ஆயுதப்போராட்டத்தை 'பயங்கரவாதமென்று' பிடிவாதமாக நிற்கின்றது.

அது பயங்கரவாதமென்றாலும், அதற்குப் பொறுப்பான தலைவர்களுடன் பேசவும் விரும்புகிறது; அந்தப் பேச்சில் உருவாகும் தீர்ப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டால் 'பயங்கர'வாதம் மடிந்துவிடுமென்ற நம்பிக்கை இந்தத்தீர்ப்பில் தொக்கு நிற்கின்றது.

இந்த முரண்பட்ட நிலையில், அரசியல் தீர்வுக்கும் இராணுவத் தீர்வுக்கும் உண்டான மாறுபாட்டில் எது முந்துமோ அது தான் முடிவென்ற வஞ்சனை எவருக்கும் புலப்படும்.

உரிமை பெரிதென்று உயிர்த் தியாகம் செய்யும் இளைஞர்களுக்கு மனித அடிப்படை உரிமைகளில் முதல் உரிமை உயிர்வாழும் உரிமையே என்பது தெரியும்.

ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்யும் பயங்கரவாதிகளை தேவையென்றால் சுட்டுத் தள்ளும் உரிமை அரசுக்கு உண்டு என்பதும் அவர்கள் அறிந்ததே.

இவ்விரண்டு முரண்பாடு போன்ற உரிமைகளைச் சீர்தூக்கிப் பார்க்குங்கால் இன்று ஆயிரக்கணக்கில் இறந்த, உடைமை இழந்த, உயர்தப்பியோடிய, உயிருடன் அகதிகளாக அவலப்படும் தமிழ்மக்கள் அனைவரும் இக்கதிக்குள்ளாவதற்கு எந்த அடிப்படை உரிமை இடமளிக்கிறது.

உலக மனச்சான்று உலக சமுதாயம் இதனை நன்குணரும் நிலை இன்று உருவெடுத்திருக்கிறது.

அதனை மூடி மறைக்க எந்த சர்வதேச ஸ்தாபனமும் அவ்வளவு தூரம் அகலமாக இருக்காது.

நேட்டோ, வார்சோ என்றாலும் சோல்ற் (SALT 1,2) ஒன்று, இரண்டு என்றாலும் சீயட்டோ சென்ரோ என்றாலும் இன்று பயங்கரவாத ஒழிப்பை முதற்பணியாகக் கொண்டு முளைத்திருக்கும் சார்க் என்றாலும் இது ஒரு சிறு உள்நாட்டு விடயம் என்று தட்டிக்கழிக்க முடியாது

மனித உரிமைகள் எங்கெங்கெல்லாம் மீறப்படுகிறதோ அவற்றை சர்வதேச மன்னிப்புச் சங்கம், சிவில் உரிமை இயக்கம் போன்ற சர்வதேச நிறுவனங்கள் மிக விழிப்பாகக் கண்காணித்து கண்டனம் தெரிவிப்பதோடு குறிப்பிட்ட நாடுகளுக்கு பணிவான விண்ணப்பங்களை விடுக்கின்றன.

இலங்கையின் 'சாதனை' அகில உலகுக்கும் அவமானம் ஏற்படுத்தும்முறையில் காணப்படுகிறது.

இங்கு வாழும் நாம் எங்கள் தினசரி நேரடி அனுபவத்தால்அதன்உண்மையை உணர்கின்றோம். அதனை மறுத்து வாதாடும் அரசு முழுப் பூசினிக்காயைச் சோற்றில் புதைக்க முயல்கின்றது.

தமிழர் அரசியல் பிரச்னை உள்நாட்டு விவகாரம் என்பது உண்மையானால் அதிலிருந்து எழுந்த 'பயங்கரவாதம்' மனித உரிமைகளை தவிடுபொடியாக்குவதுசர்வதேசப் பிரச்னை.

இதற்கு தீர்வு காண்பது எவ்வாறு? எப்போது? எந்தக் கட்டத்திலும் நாம் இந்த உரிமைகளில் நம்பிக்கை இழக்கப் போவதில்லை; அது தன்னம்பிக்கையற்ற நிலைக்கு இட்டுச் செல்லும்.

## ரூபவாஹினி

மாலை

5-00 செய்திகள்
5-05 கார்ட்டூன்
5-30 'கறுப்புக் குதிரை' (ஆங்கிலம்)
6-00 விளையாட்டுப் பயிற்சி
6-15 சிங்கள நிகழ்ச்சி
6-30 செய்திகள் (தமிழ்)
6-55 இளைஞர் நிகழ்ச்சி 'தற்ஸ் இன்கிறிடிபிள்'
7-55 தொடர் நவீனம்- அங்கம் 7
8-00 செய்திகள் (சிங்களம்)
8-20 தொடர் நவீனம் தொடர்ச்சி
8-40 'சித்சரா' அங்கம்- 11
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-20 காதல் படகு ஆங்கிலம் அங்கம்-8
10-10 'த சல்லியன்ஸ்'
11-00 ஒளிபரப்பு முடிவு

# மனித உரிமைகள் சகாப்தம் இலங்கைக்கு ஒரு பெரும் சவால்!

மனித வரலாற்றின் அதிமுக்கிய ஒரு காலகட்டத்தில் தற்கால சந்ததியினர்வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்றால் அது மிகையாகாது. இந்நூற்றாண்டு நடுப்பகுதியிலும் தொடர்ந்தும் விஞ்ஞானம் தொழில்நுட்பம் ஆகியவற்றில் மனிதன் எதிர்பாராத அளவிற்குமுன்னேற்றங்களும், கண்டுபிடிப்புகளும் அதிகரித்து வந்துள்ளன. இதேவேளையில் சமூகரீதியாகவும் இக்காலக் கட்டத்தில் மூன்று முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். முதலாவது ஆசிய ஆபிரிக்க நாடுகளில் வாழும் 100 கோடி மக்கள் குடியேற்றவாதத் தளைகளிலிருந்து விடுபட்டுத் தமது நாடுகள் சுதந்திரம் பெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது. அடுத்து சுயமரியாதையும்சமத்துவமும்கொண்ட மக்களின் வாழ்க்கை முறையின் அவசியம் வலியுறுத்தப்படுவதை அவதானிக்கலாம். மூன்றாவதாக நீதியும் சமாதானமும் நிலவும் ஒரு உலக சமூகத்தை உருவாக்கும் பணியை மேற்கொள்ளும் முயற்சி தலைதூக்கியது. இச்சமூக மாற்றங்களுக்கு நிலைக்களனாக இந்தியா திகழ்ந்ததென்றால் போற்றுதற்குரியதாம். இதற்கு மூலகாரணமாக மகாத்மாகாந்தியும் அவரது அஹிம்சைக் கொள்கைகளுமே அடிகோலின. இவரின் கொள்கைகள் மாட்டின் லூதர்கிங் போன்றோரால் பின்பற்றப்பட்டது மன்றி, 'காந்தி' என்றதிரைப் படம் மக்களிடையே பெருவரவேற்பைப் பெற்றமை இவரது கொள்கையின் தத்துவத்தை இன்றைய மக்களே உணர்ந்துள்ளமை தெளிவாகின்றது.

இதன் அடிப்படையிலேயே உலகநாடுகள் மகாத்மா இறந்த ஆண்டாகிய 1948ல் ஐக்கிய நாடுகள் சபையில் ஒன்றுகூடி 'சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை' வெளியிட்டன. இலங்கையைப் பொறுத்தவரையில் பிரித்தானிய ஆட்சி முடிவடைந்த அதே ஆண்டில் (1948) அவர்கள் விட்டுச்சென்ற சட்டஆட்சியின் முக்கியத்துவத்தைநாம் மறந்துவிடக்கூடாது. இச்சந்தர்ப்பத்தில் 1959இல் டில்லியில் நடைபெற்ற மகாநாடு நோக்கத்தக்கது. அது பின்வரும் விடயங்களை வலியுறுத்துகிறது. தனிமனிதன் தனது குடியியல், அரசியல் உரிமைகளைப் பேணுவதற்கு மட்டுமன்றி தனக்குரிய கல்வி, கலாசார, சமூக, பொருளாதார நிலைகளையும் சட்டபூர்வமாக அனுபவிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் உரிமை உண்டு. மேலும் பிரித்தானிய ஆட்சியானது இலங்கையில் வரலாற்றில் சனநாயகத்திற்கான நான்கு முக்கிய அம்சங்களைப் புகுத்தியது எனலாம். அவை யாவன பாராளுமன்றஆட்சி முறை, சுதந்திரமாக இயங்கும் நீதிச்சேவை, பத்திரிகைச் சுதந்திரம், சுயமாக இயங்கும் பல்கலைக்கழகம் என்பன.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலேயே இலங்கையில் பாராளுமன்ற ஆட்சிமுறையும் பத்திரிகைகளும் நடைமுறைக்கு வந்தன. பத்திரிகைகள் தமது வெளியீடுகளினால் பொதுசன அபிப்பிராயத்தை வளர்ப்பதோடு, பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும், ஏனைய அரசாங்க அங்கத்தவர்களுக்கும், வழிகாட்டிகளாகவும் அமைகின்றன. இன்று ஏனைய பொதுசனத்தொடர்பு சாதனங்களும் இப்பணியைச் செய்து வருகின்றன. சிறந்த ஒரு சனநாயக அமைப்பில் மக்களிடையே நடைபெறும் சனநாயகரீதியிலான கலந்துரையாடல்கள், பாராளுமன்றத்தினூடாக மந்திரிசபையை அடைந்து மக்களும் சட்ட ஆக்கத்தில் ஈடுபட வழிவகுக்கின்றது.

இவ்வாறான கொள்கையாக்கங்களில் சமூகத்தின் சகல மட்டங்களிலும் இருந்து ஈடுபடுவதன் மூலம் பிரசைகள் ஒன்றுகூடவும், ஒன்றுசேரவும், உரிமை பெறுவதோடு சிறந்த முற்போக்கானசமூகம்ஒன்றையும் எழுப்பமுடிகிறது. மனித சுதந்திரத்தின் தத்துவமே இதில்தான் அடங்கியுள்ளது. தனிமனிதனாகவன்றி சமூக அங்கத்தவனாக வாழ்வதன் மூலமே ஒருவன் முக்கியத்துவம் பெறுவதோடு தான் வாழும் சமூகத்தையும் தனித்துவம் பெறச்செய்கின்றான். இவ்வடிப்படையில் மனித உரிமைகள் பிரகடனத்தின் 19, 20, 21 ம் சரத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன, அத்தோடு 26 ம் சரத்து கல்விமனிதனை முழுமையாக்கும் அம்சம் என்பதை விளக்குவதோடு மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து ஒரு சுதந்திர சமுதாயத்தில் பங்கு பெறவும் உதவுகிறது.

இலங்கையின் பத்திரிகைத் துறையின் 75% அரச உடைமையாகவோ அன்றிக் கட்டுப்பாட்டிலோ காணப்படுகின்றன. வானொலி, தொலைக்காட்சி என்பன 100% அரச சட்டுப்பாட்டில் இயங்குகின்றன. இந்நிலையில் சுதந்திரமான செய்திப் பரிமாற்றங்களையோ அன்றி எண்ணக் கருத்துக்களையோஎதிர்பார்க்க முடியாதென்றே கூறலாம். இந்நாட்டின் சனத்தொகையில் 30% கொண்டுள்ள தமிழ் பேசும் மக்கள் சிங்களமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட செய்திகளையே கேட்கிறார்கள் அதுமட்டுமன்றி அவை பெரும்பாலும் சிங்களப் பகுதிகளோடு சம்பந்தப்பட்டவையாயிருப்பதோடு பௌத்த நிகழ்ச்சிகளையும்பிரதிபலிப்பனவாக அமைகின்றன.

1972இல் ஒரு புதிய அரசியல் திட்டம்உருவாக்கப் பட்ட போதுபோது சனநாயகத் தத்துவங்கள் எல்லாம் எங்கே போயின. கருத்துப் பரிமாற்றம் கலந்துரையாடல்கள் ஆகியவற்றில் மக்களது பங்கோ, அன்றிச் சட்டஆக்க மன்றத்தின் பங்கோ இடம் பெறவில்லை. அவசரகாலப் போர்வையின்கீழ்இவ்வாட்சிக் காலத்தின் பெரும்பகுதி பத்திரிகைத் தணிக்கைக்குள்ளாகியதும், குறிப்பிடத்தக்கது. 1978 இல் உருவாகிய அரசியல்திட்டம் முன்னையதை விடப் பல அம்சங்களில் ஜனநாயகத் தத்துவங்களைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டதெனலாம். இவ்வரசியற் திட்டத்தில் முதலாம் வாசிப்பிலிருந்து மூன்றாம் வாசிப்புவரையிலான காலப்பகுதி சில வாரங்கள் மட்டுமே நீடித்தது. சில திருத்தங்கள் ஒரு சில நிமிடங்களுள் நிறைவேற்றப்பட்டன. 21ம் சரத்தில்இடம் பெற்ற காலத்துக்குக் காலம் நடைபெறவேண்டிய பொதுத் தேர்தல்களுக்கு என்ன நடந்தது பாராளுமன்றத்தின் காலஎல்லை அவசரமாக எடுக்கப்பட்ட ஒருவாக்குக் சம்மதத்தின் மூலம் 6 ஆண்டுகாலம் நீடிக்கப்பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டு வெசாக் தினத்தில் மனித உரிமைகள் சாசனத்தின் தத்துவங்களை ஏற்றுக்கொண்ட அதற்கு முக்கியத்துவம் கொடுத்த இலங்கை அரசு இரண்டு ஆண்டுகள் சழித்து அதற்கெதிராக செயற்பட்டு பாராளுமன்ற கால எல்லையை நீடித்தது மட்டுமன்றி ஆறாவது திருத்தப் பிரேரணைமூலம் தமிழ் மக்கள் தமது வாக்குரிமையைப் பிரயோகிக்கும் சந்தர்ப்பங்களை இழக்கச் செய்துள்ளது.

''எல்லா மக்களுக்கும் சுயநிர்ணய உரிமைஉண்டு'' இது மனித உரிமைகள் பிரகடனத்தின் முதலாவது சரத்தின் ஒரு பகுதியிலும் காணப்படுகின்றது. பிரதேச சுயாட்சி மூலம் ஏற்படக்கூடிய இச் சுயநிர்ணயம் பிரதேச எல்லை, மொழியாகியவற்றின் தனித்தன்மையையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இன்றைய இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சவால் தமது தனித் தன்மையைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணமேயாகும் அது மட்டுமன்றி

(5ம் பக்கம் பார்க்க)

— குணசேகரம் நேசையா

## பிள்ளையார்கதை



பிள்ளையார் கதை விரதத்தை அலட்சியம் பண்ணி அநுட்டிப்பது, சிலகாலம் அநுட்டித்துப்பின் அநுட்டிக்காது விடுவது என்பன பெருந்தீவினையாகும். இத்தீவினையின் வலிமை- துன்பம் என்பனவற்றை இலக்கணசுந்தரியின் வரலாறு உணர்த்தும்.

இலக்கண சுந்தரி ஒரு அரசி. இவளின் கணவன் விக்கிரமாதித்தன் அரசியற் சிறப்பை விரும்பி விநாயகசஷ்டி விரதமிருந்தான். அதுகண்ட இலக்கண சுந்தரி தானும் விரதமிருந்தாள். சிலநாட்களின் பின் கையிலிருந்த 21 நூல்களாலான விநாயக விரதக் காப்பை அவிழ்த்து ஒரு தோட்டப்பகுதியில் எறிந்துவிட்டு விரதநியமங்களை விட்டு, விட்டாள். பிள்ளையார், விக்கிரமாதித்தனின் கனவில் தோன்றி, இலக்கண சுந்தரி அரண்மனையில் இருந்தால் உனக்கும் நாட்டுக்கும் துன்பம் ஏற்படும் என்றார்.

விக்கிரமாதித்தன் நித்திரை விட்டு எழுந்து கண்ட கனவை மனைவியான இலக்கண சுந்தரிக்குக் கூறும் போதே அரண்மனையில் காரணமின்றி யானை குதிரை எல்லாம் இறந்து கிடந்தன. இத்தீமைகளுக்கும் தன் கனவுக்கும் தொடர்பு இருப்பதைக்கண்டு மனைவியை அரண்மனையிலிருந்து செல்லும்படி கூறினான்.

விநாயகசஷ்டி விரதத்தை மட்டுமன்றி எந்த ஒரு விரதத்தை அலட்சியம் பண்ணினாலும் சரி; எந்தவொரு செயலைத் தொடங்கி இடையில் நிறுத்தினாலும் சரி நட்டமும் தீமையும் உண்டாகும். அதிக வசதிகளுக்கு உதவும் மின்சாரம் அலட்சியம் காரணமாக அதிக ஆபத்துக்களையும் வருவிப்பது போல் அதிக நன்மைக்கு ஏதுவான நற்கருமங்களை அலட்சியம் பண்ணுவதும் துன்பங்களுக்கு வழியாய் விடும்.

-அருளாளன்

## அடகுவைத்தோர் சங்கம்
# மறியல் போராட்டம் ஒரு வாரம் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

இன்று முதல் காலவரையறையின்றி மக்கள் வங்கிகள் முன்பாக தொடர்ச்சியாக நடத்தப்படவிருந்த மறியற் போராட்டம் ஒரு வார காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அடகுவைத்தோர் சங்கம் அறிவித்துள்ளது.

ஒய்வூதியம் மற்றும்சங்கானையில் கொள்ளைபோன நகைகளுக்கான நஷ்டஈட்டுப் பணம் வழங்கப்படுவதனாலேயே மறியற் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 16ந் திகதி முதல் வடபகுதியின் சகல மக்கள் வங்கிக் கிளைகளின் முன்பாகவும் மறியல் நடத்தப்படுமென்றும், நகைகளை அடகுவைத்த வாடிக்கையாளர்கள் அவரவர் வங்கிகளின் முன்பாகக் காலை 7-30 மணிமுதல் 10-00 மணி வரை போராட்டத்தில் பங்குபற்றுமாறும் வேண்டப்படுகின்றனர்.

இம்மறியற் போராட்டம் யாழ். செயலகத்திற்கும் விஸ்தரிக்கப்படுமென்று இச்சங்கம் தெரிவிக்கிறது.

இப்போராட்டம்பற்றிய சகல பிரச்னைகளும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் உட்பட பல்வேறு அமைப்புகளுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதென்றும் மேற்படி சங்கத்தினர் தெரிவித்தனர்.

[ஐ]

## வேலையற்றோருக்கு கடனுதவி

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் தேசிய இளைஞர் சேவை மன்றப் பொதுக்கூட்டம் மல்லாகம் அபிவிருத்திச் சங்க அலுவலகத்தில் திரு. எஸ். அருள்சோதி தலைமையில் யில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி செல்வி மகேஸ்வரி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்குச் சுயதொழி, வாய்ப்பிற்காக அரசிடமிருந்து கடன்பெற்றுத் தருவதால் கூறினார். [க]

## நாவற்குழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் ஆயுதப்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் சகல போக்குவரத்துக்களும் அப்பாதைவழியாக நிறுத்தப்பட்டன.

வ. பி. போ. ச. பஸ்கள் மினிபஸ்கள் உட்பட சகல சேவைகளும் கோப்பாய் ஊடாகவே நேற்று நடைபெற்றன. காயமடைந்த இருவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (க)

## மனித உரிமைகள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் என்றரீதியில் இவ்வேளையிலும் தமக்கிருக்கும் கடமைகளையும், உரிமைகளையும் இவர்கள் நினைவு கூர வேண்டும். சுயநிர்ணயமும், தனித்தன்மையும் ஒரு இனம் இன்னொரு இனத்துக்கு வழங்கும் அன்பளிப்பாகவோ, சலுகைகவோ அமையும் ஒன்றல்ல. அவை தாமாகவே தமக்காக ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதொன்று. இவ்வாறான வளர்ச்சியில் நமது சமுதாயம் பரந்த அடிப்படையில் முடிவுகளை எடுக்கக் கூடிய ஒரு நிலை உருவாக வேண்டும்,

இலங்கையில் வாழும் தமிழ் சமூகமானது இலங்கையில் ஒருமைப்பாடு கலைக்கப்படாத நிலையில் தனிச் சமூகமாகஅதே வேலையில். உலக சமூகத்திலும் இடம் பெறும் ஒன்றாகத் தனது தனித்துவத்தைப் பேணுவது விரும்பத்தக்க ஒரு முடிவாகும்.

## வடக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு உள்ளாகியுள்ளனர். இப்பகுதிகளில் பயங்கரவாத நடவடிக்கை இல்லாதிருப்பின் ரயில்வே பகுதிக்கு அதிக வருமானம் கிடைத்திருக்கும்.''

அத்தனகல எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி: ''ரயில்சேவையைப் பொறுத்தவரையில் அநுராதபுரத்துக்கு அப்பால் உள்ள பகுதி பாதுகாப்பு அற்ற பகுதியாகவே போக்குவரத்து அமைச்சால் கருதப்பட்டுவருகிறது.''

அமைச்சர் எம். எச். மொகமட்: இப்போது வடக்கு ரயில் சேவைகள் நடைபெறுவதை கௌரவ அங்கத்தவர் அறிய வேண்டும்.''

லக்ஷ்மன் ஜெயக்கொடி: ''ரயில்கள்ஓடவில்லை. ஊர்ந்து செல்கின்றன. எல்லைப் பகுதி எங்கோ உள்ளது. நீங்கள் அநுராதபுரத்தை எல்லையாகக் கொள்ள வேண்டாம்.''

பொத்துவில் முதலாவது எம். பி. ஜனுப் உதுமா லெவ்வை: ''வடக்கு, கிழக்குப் பகுதிரயில் பயணத்துக்கான ரயில் டிக்கட் ஏற்பாடு காசுக்கட்டளை மூலம் செய்யப்படுகிறது. இப் புதிய ஏற்பாடு தபால் நிலைய அதிபர்களையும் கஷ்டத்துக்கு உள்ளாக்குகிறது. ரயில் நிலையங்களில் இடம் பெறும் கொள்ளைகளுக்காகத் தபால் நிலையங்களுக்கு பொறுப்பைமாற்றினால் தபால் நிலையங்களும் கொள்ளையடிக்கப்படலாம். எனவே ரயில் நிலையங்களுக்கு அருகாமையில் விசேட ஏற்பாடுகள் மூலம் ரயில் டிக்கட்டுக்களைப் பெறச் செய்வதே நல்லது. வடக்கு, கிழக்கிற்கான ரயில் சேவைகளை வசதிகருதி மீண்டும் கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படுவதற்கான ஏற்பாடுகளையும் செய்யவேண்டும். தற்போது இந்த ரயில்சேவைகள் மருதானையிலிருந்தே நடைபெறுகின்றன.''

[ய - அ]

## மட்டுநகரில் கொள்ளை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு இலங்கை வங்கிக் கிளை அலுவலகத்தில் இருந்து சுமார் 15 இயந்திரப் படகுகள் நேற்று அதிகாலை கொள்ளை அடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டம் பூராவிலும் நேற்று பலத்த சோதனை நடந்தது.

கொள்ளையடிக்கப்பட்ட மேற்படி இயந்திரப் படகுகள்; இலங்கை வங்கியில் கடனுதவி பெற்று வாங்கியவர்கள் திரும்பவும் அக்கடனைச் செலுத்தாததைத் தொடர்ந்து பறிமுதல் செய்யப்பட்டவையாகும்.

நேற்றுக் காலை தொடக்கம் சகல வாகனங்களையும் இரகசியப் பொலிசார் தடுத்து வைத்து சோதனை நடத்திய போதிலும் கொள்ளையடிக்கப்பட்ட இயந்திர வள்ளங்கள் கண்டுபிடிக்கப்படவில்லையாம்.

மட்டக்களப்பு நகர் நேற்றுக்காலை ஒன்பது மணி முதல் பகல் இரண்டு மணி வரை பலத்த சோதனைக்குள்ளானது. ஆறு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (மா)

## நியாயமான...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

அரசு சார்பில் கையளித்த இந்திய உயர்ஸ்தானிகர் திரு. டிக்ஸிற் தமது உரையில் மேலும் கூறியதாவது:

''தவறான வழிகளையும் வன்முறைகளையும் கையாளுவதைத் தவிர்த்து தமது நியாயமான உரிமைகளுக்காக மன உறுதியோடு போராடவேண்டும். 1983 ல் ஏற்பட்ட இழப்புகளையும் அதன் வேதனைகளையும் நாம் அறிவோம் இத்தகைய இழப்புக்கள். வேதனைகள் எதிர்காலத்தில் ஏற்படாது திட்டமிட்டுச் செயற்படுதல் அவசியமாகும், இலங்கையில் சமூகங்களுக்கு இடையே நல்லுறவும் நல்லெண்ணமும் நிலைத்து நிலவ வேண்டும் என்றே இந்தியா விரும்புகின்றது. அதன் எதிர்பார்ப்பும் இதுவே'' என்றார்.

(இ-அ)

## அரசியல்கொலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுமைகளுக்கு எதிராக உலக சமூகமும் குறிப்பாக இந்தியா குரல் எழுப்பவேண்டும்! இத்தகைய கொடுமைகளைப் பார்த்துக்கொண்டு மௌனமாக இருக்கக்கூடாது. திருகோணமலை மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் புரிந்துள்ள அட்டூழியம் குறித்துத் திகிலும் அதிர்ச்சியும் அடைந்திருக்கிறோம்! இந்தச் சம்பவங்கள் தொடர்பாக அரசு உத்தரவிட்டுள்ள நீதி விசாரணைகள் வெறும் கண்துடைப்பு. ஏனெனில், இராணுவத்தினர் தான் இச்சம்பவங்களுக்குச் சாட்சிகளாக இருப்பார்கள்'' என்றும் கூட்டணி அரசியற்குழி குற்றஞ்சாட்டியுள்ளது

[து]

## இன்று

[யாழ்ப்பாணம்]

மனித உரிமைகள் தின பலி பூசை பாஷையூர் புனித அந்தோனியார்ஆலயத்தில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. [மா]

## முதல் வருட நினைவஞ்சலி

திருமதி கனகேஸ் லோகாம்பிகை

(பவா)

இளையப்பாவின் மகள்

அன்புடனும், பண்புடனும் வாழ்ந்து எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்துவிட்டாயே. உங்கள் ஆத்மா சாந்தியடைய இன்றும் என்றும் இறைவனை வேண்டுவோம்.

அக்கா

இளையப்பாவின் மகன்.

274, நாவலர்,வீதி

யாழ்ப்பாணம். 2282


**உஷாமினி**

10-30, 2-30, 4-45, 6-45

COMMANDO-2

இதுவரை வெளிவந்த படங்களிலும் மிகச்சிறந்த புதிய சண்டைப்படம்

**சரவணபவன் மினி சினிமா**

10-30, 2-30, 4-30, 7-00

BRONX WARRORS PART-2

பயங்கர சண்டைகள் நிறைந்த படம்

**எம்பயர்**

7 அடித்திரையில்

10-30, 2-30, 6-30,

ஆனந்த்பாபு, அம்பிகா

**"அர்த்தமுள்ள ஆசைகள்"**

**லிடோ சினிமா**

10-30, 2-30, 4-30, 6-30

**"SPRING BREAK"**

(Adults only)

கொழும்பில் பலநாட்கள் ஓடியது. யாழ். நகரில் முதல் தடவை காண்பிக்கப்படுகிறது. பாலியல் காட்சிகள் நிறைந்த படம்.

**வெலிங்டன்**

10-30, 2-30, 4-15, 6-30

கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய, பாலியல் காட்சிகள், மனிதக்குரங்கின் சாகச விளையாட்டுக்கள் நிறைந்த

TARZAN THE LORD OF APES

(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

யாழ். நகரில் முதன் முதலாக காண்பிக்கப்படுகிறது.



# University of Jaffna

POSTGRADUATE DIPLOMA IN EDUCATION

PART-TIME/FULL-TIME COURSE. 1985

Further to the Admission Test, the candidates who are summoned for an Interview, to be held on 13/12/1985 commencing at 9-00 a. m. to decide on the final selection, have already been notified.

REGISTRAR

(2279)



சங்கானை

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

கிறே நைலக்ஸ்

**கேள்வி மூலம் விற்பனை**

பாவு 140

ஊடை 72'' அகலம் 46''

மேற்குறிப்பிட்ட அளவினை உடைய 6000 மீற்றருக்கு மேல் கிறே நைலக்ஸ் விற்பனைக்குண்டு. விரும்புவோர் மீளக்கூடிய பிணைப் பணம் ரூபா 1000/- செலுத்தி சங்கத்தால் வழங்கும் கேள்வி விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 19-12-85 விண்ணப்பங்கள் யாவும் ''தலைவர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், , சங்கானை'' என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

தலைவர்

சங்கானை பல.நோ.கூ.சங்கம்.

10-12-85. (2280)



**சவுதி அரேபியா, குவைத்**

# பிரயாணம்

சவுதி அரேபியாவிற்கு தொழிலாளர் (CATERING LABOURERS)

குவைத் நாட்டிற்கு கிளினர்ஸ் (CLEANERS)

ஆகிய வேலைகளுக்கு குறுகிய காலத்தவணையில் பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

இம்மாதம் 14-ந் திகதிக்குமுன் பாஸ்போர்ட், 6 படங்களுடன் நேரில் வரவும்.

முகவரி:

**க. மு. வைத்தீஸ்வரன்,**

கச்சாய் வீதி, கொடிகாமம்.

(2281)



# நிருபர்கள் தேவை

திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, செட்டிக்குளம், முருங்கன், மன்னார், தலைமன்னார், அடம்பன், இலுப்பைக்கடவை, முழங்காவில், பல்லவராயன்கட்டு, பரந்தன், உருத்திரபுரம், இராமநாதபுரம், அக்கராயன்குளம், துணுக்காய், மாங்குளம், புளியங்குளம், ஓட்டிசுட்டான், நெடுங்கேணி, முல்லைத்தீவு [மேலதிக நிருபர்] புதுக்குடியிருப்பு, விசுவமடு, பளை, செம்பியன்பற்று ஆகிய இடங்களில் 'ஈழநாடு' நிருபர்களாக கடமையாற்றுவதற்கு பத்திரிகைத் தொழிலில் ஆர்வமும், தகுதியும், அனுபவமும் உள்ள அந்தந்தப் பகுதிகளில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கிராமசேவையாளரின் நற்சான்றிதழுடனும், மற்றும் தராதர சான்றிதழ்களின் புகைப்படப்பிரதிகளுடனும் 17-12-85 க்கு முன் தபால்மூலம் விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி,

ஈழநாடு லிமிட்டெட்,

தபால்பெட்டி இல: 49,

யாழ்ப்பாணம்.

[2233]



நியூ விக்ரேஸ்

**புதிய வீடியோ பட வெளியீடுகள்**

**1. துளி விஷம்** *சிவாஜி *பத்மினி

நியூ விக்ரேஸ்

எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

தொலைபேசி: 23532. (2284)

# “ஆரம்ப பாடசாலைகளின் கல்வித்தரம் உயரவேண்டும்”

(யாழ்ப்பாணம்)

‘‘கல்வியில் எமது மாவட்டம் முன்னேறவேண்டுமானால் இங்குள்ள ஆரம்ப பாடசாலைகளின் கல்வித்தரம் மிகவும் உயர்ந்ததாக இருக்கவேண்டும். இப்பாடசாலை, இலங்கையில் முதன்மை பெற்ற பாடசாலைகளில் ஒன்ருகும். நல்லூர் கல்வி வட்டாரத்திலும் ம்முதன்மை பெற்றதாகும்?’’

இவ்வாறு, யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமிமண்டபத்தில்நடைபெற்ற யாழ். இந்து ஆரம்ப பாடசாலையினது பெற்ருேர் தின விழாவிலும், பரிசளிப்பு விழாவிலும் கலந்துகொண்டு பேசுகையில் யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை கூறினுர்:

பாடசாலை அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சு. சிவவிநாயகமூர்த்தி கலந்து கொண்டார். பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு. செ. கோடீஸ்வரன் நன்றி கூறினுர். (ஐ)

# தொழில்நுட்ப அதிகாரி கடத்தப்பட்டார்!

(கொழும்பு)

கல்முனையில் கட்டடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. பாலசுப்பிரமணியம் நேற்று முன்தினம் இனந்தெரியாதவர்களினுல் அவரது வீட்டிலிருந்து கடத்தப்பட்டுள்ளார்.

இவரது வீட்டிலிருந்த கார் மோட்டார்சைக்கிள், தொலைக்காட்சிப்பெட்டி மற்றும் பொருட்களும் இனந்தெரியாதவர்களினுல் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. (ய-க)

# சிவசுப்பிரமணியத்துக்கு இறுதி அஞ்சலி

(கொழும்பு)

காலஞ்சென்ற முன்னுள் நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியத்தின் இறுதிக்கிரியைகள் நடந்த சனிக்கிழமை கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றது.

இறுதிக்கிரியைகளில்முன்னுள் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா, கிராமிய அபிவிருத்தித்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராஜதுரை, பிரதம நீதியரசர் திரு. எஸ். எஸ். சர்வானந்தா, சட்டமா அதிபர் திரு சிவா பசுபதி மற்றும் நீதியரசர்களும் பொதுமக்களும் இதில் கலந்துகொண்டனர்.

# அமரர் பரமானந்தராஜா



நல்லமையையும், அன்போடிணைந்த சமூகசேவையையும் கவரக்கூடிய வியத்தகு ஆற்றல்படைத்த இம்மனிதர் அமரத்துவம் அடைந்து ஒரு வருடம் கடந்துவிட்டது. சிலர் தம்மை அரசியற்துறையில் பிரபல்யப்படுத்துவதற்கு சமூகசேவையில் ஈடுபடுவார்கள். ஆனுல் அரசியலில் மிக இளமைக்காலத்தில் புகுந்துள்ள இம்மனிதர் மக்களுக்கு தான் செய்யக்கூடிய சமூகப் பணியை நிறைவேற்றுவதற்கு அரசியல் நுட்பதிட்பங்களைப் பயன்படுத்திஞர். இவரின் அரசியற் சாணக்கியத்தை நன்கு புரிந்த கோப்பாய் மக்கள் இவரை கிராமசபைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். இவர் அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் கட்சியினராய் அக்கட்சியின் இணைக்காரியதரிசியாக விருந்து கடமையாற்றுகையில் கட்சித் தலைவரான அமரர் ஜி.ஜி. பொன்னம்பலத்துக்கும் அக்கட்சிக்கும் இறுதிவரை விசுவாசமாகவிருந்தார். கிராம சபைத்தலைவராய் இவர் இருந்து தமது கிராமத்திற்குப் பலதரப்பட்ட வசதிகளை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து தனது பூரண சேவையை அளித்தார். நன்றி உணர்ச்சியால் உந்தப்பட்ட அம்மக்கள் தாது அன்பையும் பாசத்தையும் இவரின் இறுதி அஞ்சலியில் காட்டுவதற்கு பல இன்னல்களும் பதட்டமும் நிறைந்த கால கட்டத்தையும் பார்க்காமல் பெருமளவில் வந்தனர்.

‘‘பரமானந்தராஜா விளையாட்டு அரங்கு’’ என்று நாமம் சூட்டப்பட்ட மைதானம் அவர்கள் இப்பெரிய மனிதர் மீது வைத்திருந்த மதிப்பின் சின்னமாகத் திகழ்கிறது. இவர் தனது நலன் புரிச்சேவைகளை கிராமத்துடன் மட்டுப்படுத்திஞரல்லர். இவர் பாராளுமன்ற அங்கத்துவப் போட்டியில் தம்மை ஈடுபத்தாவிட்டாலும் இவரின் சேவைகள் அனைத்தும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் சேவையாகவே பெரிதும் கருதப்பட்டு, இவர் இவ்வருன பதவிக்கே தகுதிபடைத்தவர் என்றும் கணிக்கப்பட்டிருந்தார்.

இவர் அரசியற்துறையிற் போலவே பொதுநிர்வாக சேவையிலும்- மீன்பிடி இலாகாவில் விஸ்தரிப்பு உத்தியோகத்தவராகவும், ஆலோசகராகவுமிருந்து குடாநாட்டு மீன்பிடித் தொழிலாளரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த ஈடிணையற்ற சேவையாற்றியுள்ளார். அபாயம் சூழ்ந்த உழைப்பூதியத்தைக் கொண்டுள்ள மீனவத் தொழிலாளரின் கஷ்டங்களைக் குறைப்பதற்கு புதிய முறைகளை அறிமுகப்படுத்தியும், நவீன கருவிகளைப் பெற்றுக்கொடுப்பதில் முன்னேடியாகத் திகழ்ந்தார். இவர்களது வள்ளங்கள் தென்னிந்திய சுங்க அதிகாரிகளினுல் கைப்பற்றப்பட்டபோதெல்லாம், அவற்றை மீட்டுக்கொடுப்பதற்கு புயல்நிறைந்த கடலிலும் அஞ்சா நெஞ்சுடனும் உற்சாகத்துடனும் எண்ணற்ற தடவைகள்பிரயாணஞ் செய்திருக்கிருர் என்ற இவரின் மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்திதான் என்னே.

இவர் பொதுநிர்வாக சேவையிலிருந்த பொழுது சர்வதேச ரீதியில் அமைந்துள்ள உணவு விவசாய ஸ்தாபன கூட்டங்களுக்கு நாட்டின் பிரதிநிதியாய் பங்குபற்றியதிலிருந்து பெற்ற அனுபவங்களைப்பயன்படுத்தி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மீன்பிடித் தொழிலாளரின் நலனுக்காக உழைத்தார்.

எஸ். ஜி. சபாலிங்கம்

# இளைப்பாறுகிருர்



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சுதுமலை வடக்கில் விவாகஞ் செய்தவருமாகிய இளையதம்பி இராசரத்தினம் (மலையன்) அவர்கள் சட்டுடை சைவவித்தியாசாலையில் தொடர்ந்து 12 வருடங்கள் அதிபராகக் கடமையாற்றி இம்மாதம் இளைப்பாறுகிருர். இவர் தனது 20 வருட ஆசிரிய சேவைக்காலத்தில் பல பாடசாலைகளில் கடமையாற்றி எல்லோரினதும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

**BECON**

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

DAY CLASS

Pure / App — திரு. நல்லையா

Pny — யோகேந்திரா

Che — செல்வா

ஆரம்பம்: 11-12-85 புதன்

நேரம்: 11-45 a.m.

# பிரவேசப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஆறும் வகுப்பில் (வருடம்7) கற்கவிரும்பும் மாணவர்களுக்குரியபிரவேசம். பரீட்சை இம்மாதம் 21 ஆந் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் முதல் ஐந்து இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் சிலர் முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# அரச அதிபர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

‘‘புதிய அடையாள அட்டை தொடர்பாக எதுவித தகவலும் தெரியாது’’ என்று யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் ‘ஈழநாடு’வுக்கு தெரிவித்தார்.

சில தினங்களுக்கு முன்னர் லீவில்சென்றிருந்த அரச அதிபர் திரு. பஞ்சலிங்கம் நேற்று முன்தினம் யாழ். செயலகத்துக்குவந்து பணியாற்றினுர்.

தான் தனிப்பட்ட காரணமாக லீவில் சென்றிருந்ததாகவும், அறிவித்தல் எதுவும் வரவில்லை என்றும்அவர் தெரிவித்தார்.

# பூநகரி பஸ் சேவை பிரஜைகள் குழு கோரிக்கை

[பூநகரி]

பூநகரிப் பகுதிக்கு தினமும் இ. போ. ச. பஸ் சேவையை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யும்படி பூநகரி பிரஜைகள் குழு வடபிராந்திய போக்குவரத்துச் சபையை கோரியுள்ளது.

மேற்படி குழு வட பிராந்திய இ. போ. ச. தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

பூநகரி தபால்சேவை சீர்குலைவால் பலத்த பாதிப்பு மக்களுக்கு ஏற்படுகின்றது. யாம் 23/9/85ல் கிளிநொச்சி சாலை அத்தியட்சகருக்கு முறையிட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்து 17/10/85ல் தங்களுக்கும் அறியத்தந்தும் கிளிநொச்சி பூநகரி இ. போ. ச. பஸ் மூலமான தபால்சேவை தினமும் இல்லாமை குறித்துபூநகரி பிரஜைகள் குழு தங்களுக்கு மீண்டும் தெரிவிக்கிருேம்.

தினமும் கிளிநொச்சியில் இருந்து பூநகரி - சங்குப்பிட்டிக்கு மூன்று சேவைகளுக்குமேல் நடைபெற்று வந்தது. இப்போ ஒருசேவையும் இல்லை. தபால் சேவைஒருகிழமைக்கு இரண்டு கிழமைக்கு ஒரு தடவைநடைபெறுகின்றது. இது மிகவும் வருந்தத்தக்க செயலாகும்.

பூநரிப் பகுதியில் ஓர் உதவி அரசாங்கஅதிபர், எட்டுகிராம சேவையாளர் பிரிவு, இரண்டு நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகங்கள், ஒரு பிரதம தபால் நிலையம், எட்டு உப தபால் நிலையங்கள், இரண்டு கமத்தொழில் சேவை நிலையங்கள்ப.நோ.கூ. சங்கம்,பதினறு கிளை நிலையங்கள், மூன்று உள்ளூராட்சி உப அலுவலகங்கள் நான்கு அரசினர் வைத்திய சாலை, 21 பாடசாலைகள், பல பொது ஸ்தாபனங்கள், பல அரச நிறுவனங்கள் யாவும் பூநகரி தபாலகம் ஊடாகவே தபால்சேவை செய்து வந்தன. இவ்விடம் தந்தி வசதியில்லை. எவ்வளவோ கஷ்டங்கள் மத்தியில் பூநகரிப்பகுதியில் பலஆயிரக்கணக்கான மக்கள்வாழ்ந்து வருகின்றுர்கள். தபால்சேவை மூலமாக பல உதவிகளைப் பெறுகிருர்கள். ஆகவே மீண்டும் முன்னைய காலங்களில் நடைபெற்றுவந்த இ.போ.ச. பஸ் சேவை தினமும் நடைபெற ஆவனசெய்வீர்களெனக் கேட்டுக் கொள்கின்றேம்.

# தையல் தொழிலாளர் ஐக்கிய முன்னணி உதயம்

[யாழ்ப்பாணம்]

தையல் தொழிலாளர்களின் ஐக்கியத்தையும், சம்பள முரண்பாட்டை சமப்படுத்துவதையும் கருத்திற்கொண்டு தையல் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்காக வடமாகாண தையல் தொழிலாளர் ஐக்கிய முன்னணி யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இதன் நிர்வாகிகள் வருமாறு: தலைவர்: ஏ.ஏ. சலீம், செயலாளர்: ஹாமிம், தனுதிகாரி, எம். ஜே. நிஸார். இவர்களுடன் ஏழு பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் தலைவர் உரையாற்றுகையில், தையல் தொழில் நிலையங்களில் தொழிலாளர்களாக பணிபுரிபவர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்கி பொதுவான சம்பளம் ஏற்பாடு செய்வது பற்றியும், சுயமாக தொழில் புரிபவர்களுக்கும் இன்னும் பல்வேறுரக தையல் தொழிலாளர்களின் மத்தியில் ஐக்கியத்தை மேம்படுத்தவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்திஞர்கள்.

நாட்டின் இன்றைய அசாதாரண காலகட்டத்தில் தையல் தொழிலாளர்களின் கஷ்டங்களையும் எதிர் நோக்கும் நெருக்கடிகள் பற்றியும் அங்கத்தவர்களின் கருத்துப் பரிமாற்றமும் நடைபெற்றது.

# இன்றைய பலன்

மாதம்- கார்த்திகை
திகதி: 25(1985-12-10)
கிழமை- செவ்வாய்
திதி- திரயோதசி முற்பகல் வரை
நக்ஷத்திரம்- விசாகம் பிற்பகல்வரை

மேடம்: தொழில் துறையில் முட்டுக்கட்டை தென்படும். உள் வீட்டிலேயே பூசல்கள் தோன்றும். இன்று எதையும் சிந்தித்து செயலாற்றவும்.

இடபம்: பசுமையான சம்பவங்கள் இடம் பெறும். குடும்பத்திலும் மகிழ்ச்சிகரமான சூழ்நிலைக்கு இடமுண்டு. நண்பர் ஒருவரின் வருகைக்கும் இடமுண்டு.

மிதுனம்: முன்னேற்றத்திலும் முட்டுக்கட்டை தோன்றும். கொடுத்த வாக்கைக் காற்பாற்றமுடியாமல் திண்டாடுவீர்கள். நண்பராலும் நஷ்டத்திற்கிடமுண்டு.

கடகம்: தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும் பிதா வழி ஆதரவும் கிடைக்கும். குருவின் ஆசியும் உண்டு.

சிங்கம்: உற்சாகமான தினம். உறவினர்கள் உற்சாகப்படுத்துவார்கள். புதிய தொழில்களிலும் மனதைச் செலுத்துவீர்கள்.

கன்னி: விவசாயிகள் வாழ்வில் நல்ல திருப்பம ஏற்படும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பும் கிட்டலாம். அறிஞர்கள் ஆதரவும் உண்டு.

துலாம்: எதிர்பாராத வகையில் பொருள் விரயமாகும். கொடுக்கல் வாங்கல் பிணக்குகள் ஏற்படும். வீணை சிந்தனைக்கு இடமளியாது அமைதியுடன் இருக்கவும்.

விருச்சிகம்: வாழ்க்கை இன்று புதிராகத் தோன்றும். ஆசாரக் குறைவிற்கும் இடமுண்டு. உள்ளச் சோர்வுடன் உடல் நலக்குறைவிற்கும் இடமேற்படும்.

தனுசு: அறிவாற்றலை வளர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுப்பீர்கள். புலவர்கள் போற்றப்படுவார்கள். திடீர் வரவும் உண்டு.

மகரம்: உறவு முறையில் பிளவு தென்படலாம்.

(7-ம் பக்கம் பார்க்க)

## இன்றைய பலன்!

(6-ம் பக்கத் தொடர்ச்சி) தில் உற்சாகம் குன்றும். சகோதர சுகமும் உண்டு.

கும்பம்: கல்வித்துறையில் முன்னேற்றம் ஏற்படும். அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும். மாதுருவழிப் பெருமைக்கும் இடமுண்டு.

மீனம்: புரட்சிகரமான மாறுதல்களை விரும்புவீர்கள். புத்திரவழியால் சிறப்புண்டு. புதியதொடர்புகளும் ஏற்படும்.

திருமலை
வே, ரவீந்திரன்

## கண்காணிப்பு....

(3 ம் பக்க தொடர்ச்சி) பொலிஸ் நிலையத்தை ஆனையிறவிற்கோ கொக்கிளாயிற்கோ இடமாற்றுமாறும் கோரிக்கை விடப்பட்டது என்றும் அவர் கூறினர்.

அடிக்கடி இடம்பெறும் கெடுபிடிகள், அடையாள அட்டைகள் பறிக்கப்படுதல். வீதித்தடை பற்றியும் விரிவாகக் கூறப்பட்டதாம்.

கண்காணிப்புக்குழு முன்னிலையில் திருநகரைச் சேர்ந்த 4 பேரும் பிரமந்தனாற்றில் ஒருவரும், பாரதிபுரத்தில் ஒருவரும் வர்த்தகர் சார்பில்ஒருவருமாக 7 பேர் மட்டுமே சாட்சியமளித்ததாகச் செயலாளர் சட்டத்தரணி ரி. ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்தார்.

## ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியம் பெறுவர்கள் (டிசம்பர்) இம்மாதம் முதல் கொடுப்பனவு உறுதிச்சீட்டில் ஒரு ரூபா முத்திரை ஒட்டியே கையொப் மிட வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது. முன்னர் இது 50 சதமாக இருந்தது.

இலங்கை வங்கி, கச்சேரிக் கிளைகளில் ஓய்வூதியம் பெறுபவர்கள் இம்மாத ஓய்வூதியங்களை டிசம்பர் 14 ம் திகதி சனிக்கிழமையும். 15 ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இலங்கை வங்கி கோட்டை கொடுப்பனவு காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

14 ம் திகதி சிவில் ஓய்வூதியம் பெறுவோர் சகலருக்கும் கொடுக்கப்படும். 15 ம் திகதி விதவைகள் அனாதைகள், ஆசிரியர், ஆசிரிய விதவைகள், படைக்கல சேவிதர்கள், படைக்கல சேவிதர்களின் விதவைகள் ஆகியோருக்கும் பென்சன் வழங்கப்படும், இக் கொடுப்பனவுகள் காலை 9மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை செய்யப்படும். (ஐ)

## பத்தாவது ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு வாழ்வொளி பயிற்சி நிலையத்தின் பத்தாவது ஆண்டு நிறைவுவிழா அருட்திரு. சி. ஜி. ஜெயக்குமார் அடிகள் தலைமையில் அண்மையில் கொண்டாடப்பட்டது.

யாழ்மாவட்ட சிறுகைத்தொழில் உதவிப் பணிப்பாளர் திரு.சி. ஆர். வேலாயுதபிள்ளை பிரதம விருந்தினராக இவ்விழாவில் கலந்துகொண்டு இங்கிடம்பெற்ற கைத்தொழில் கண்காட்சியையும் திறந்து வைத்தார். (ஐ)

## துப்பாக்கிச் சூடு ஒருவர் காயம்

[முல்லைத்தீவு]

தண்ணிமுறிப்பில் சீருடையினர் வயல்களில் வேலைசெய்து கொண்டிருந்த விவசாயிகள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இச்சம்பவத்தில் ஒரு இளைஞர் படுகாயம் அடைந்தார்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்கவே பொதுமக்கள் காடுகளுக்குள் ஓடிஒளித்துக்கொண்டனர். [க]

## இப்படியும் நடக்கிறது

ஐ. தே. க. அரசு பதவியேற்றதும், ''திறந்த பொருளாதாரக்கொள்கை மூலம் நாட்டை வளமாக்குவோம்'' என்று மார் தட்டியது.

கடந்த எட்டு வருட காலத்தில் அதன் சாதனைகளை, சில உத்தியோக பூர்வ அறிக்கைகளைஆதாரமாகக்கொண்டு 'போர்வேர்ட்' செய்தி வெளியிட்டுள்ளது. படித்துப் பாருங்கள்.

''ஒவ்வொரு 10 பேரில் ஆறுபேர் உத்தியோக பூர்வ வறுமைக்கோட்டுக்கு கீழே ரூ. 300க்கும் குறைவானவருமானத்துடன் வாழ்க்கை நடத்துகின்றனர். ஒவ்வொரு ஐந்து பேரில் ஒருவர் தொழில் பார்ப்பதற்குரிய பருவத்தையடைந்தபோதும் வேலையற்று அல்லது கடுமையான வேலைப்பளுவில் இருக்கின்றனர். பாடசாலை செல்லாத ஒவ்வொரு மூன்று குழந்தைகளில்ஒன்று போஷாக்கின்மையால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு எட்டுப்பேரில் ஒருவர் சித்த சுவாதீனமற்றுள்ளார். கவலையாலும், விரக்தியாலும் இந்தநிலை காணப்படுகிறது. போதை வஸ்துமோகம், விபசாரம், பாலியல் நோய்கள், குற்றச் செயல்கள் என்பவற்றால் ஆண் - பெண் இருபாலாரும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதுனர். இத்துர்நடத்தைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. கல்வியறிவின் தரம் குன்றிவருகின்றது. கல்வி பயில முன்வருவோர் தொகை வெகுவாகக் குறைந்து வருகின்றது. லஞ்சம், ஊழல் ஆகியன அவற்றின் முன்னைய சாதனைகள் யாவற்றையும் முறியடித்து 'வெற்றி' நடைபோடுகின்றன.''

திறந்த பொருளாதாரம் வாழ்க!

— ஊடுருவி


யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின்

# கேள்வி அறிவித்தல் - 1986

## சந்தைகள், கடைகள், இறைச்சிக்கடைகள் முதலியன

30-9-85, 12-11-85ந் திகதிகளில் என்னால் விளம்பரப் படுத்தப்பட்ட கேள்வி விளம்பரத்தின் பிரகாரம் கிடைக்கப்பெற்று நிராகரிக்கப்பட்ட கேள்விகளுக்கும், கிடைக்கப்பெறாத கேள்விகளுக்கும், சில புதிய கேள்விகளுக்கும் மீண்டும் கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்விகள் பற்றிய விபரமும் நிபந்தனைகளும் கேள்விப்பத்திரங்களும் யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் அவ்வவ் உப அலுவலகங்களில் 18-12-85ந் திகதி நண்பகல் 12-00மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதி யாழ்ப்பாணம் அபி. சபை தலைமை அலுவலகத்திலும் இணைப்பிரதி உப அலுவலகத்திலும் 19-12-85ந் திகதி நண்பகல் 12-00மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | நிர்ணயிக்கப்பட்ட கேள்வித்தொகை |
|---|---|---|
| 01. சுன்னாகம் | மாட்டிறைச்சிக்கடை இல. 1. | 40000, 00 |
| 02. மானிப்பாய் பட்டினம் | ஆட்டிறைச்சிகடை இல். 1. | 10000. 00 |
| 03. பண்டத்தரிப்பு '' | மாட்டிறைச்சிக்கடை இல. 1. | 35000. 00 |
| 04. பண்டத்தரிப்பு கிரா. | 1. மாதகல் மாட்டிறைச்சிக்கடை | 3000. 00 |
| | 2. இளவாலை மாட்டிறைச்சிக்கடை | 6000. 00 |
| | 3. மாசியப்பிட்டி மாட். கடை | 8000. 00 |
| 05. வட்டுக்கோட்டை | இருத்தலடிச்சந்தையடி ஆட்டி. கடை | 3000. 00 |
| 06, நீர்வேலி | ஆட்டிறைச்சிக்கடை | 1200. 00 |
| 07. வேலணை | மாட்டிறைச்சிக்கடை | 5000. 00 |
| 08. கரைச்சி | 1. ஆனையிறவு மாட்டி. கடை | 1000. 00 |
| | 2. உருத்திரபுரம் டி. 8 மாட், கடை | 1000,00 |
| | 3. ,, டி. 10 ,, | 7500,00 |
| 09. கிளிநொச்சி | பரந்தன் சந்தை ஆட்டி. கடை | 4000,00 |
| 10. மயிலிட்டி | பலாலி மாட்டி. கடை | 8000,00 |
| 11. ஊர்காவற்றுறை | 1. மேல்மாடிக்கடைகள் 8 ஒரேமுறையில் செலுத்தும் தொகை ஒவ்வொன்றிற்கும் | 12500.00 |
| | 2. சந்தைக்கடை இல. 3 | 400.00 |
| | 3. சந்தைக் கடை இல. 4,5,6 | 1000.00 |
| | 4. கருவாட்டுக்கடை | 1000.00 |
| 12. மானிப்பாய் பட்டி | 1. மானிப்பாய் சந்தை | 45000.00 |
| 13. ,, கிராமம் | தொட்டிலடிச் சந்தை | 2000.00 |
| 14. ஏழாலை | குப்பிளான் சந்தை | 1500.00 |
| 15. காரைநகர் வடக்கு | நாவலடி கேணிசந்தை | 3000.00 |
| 16. நெல்லியடி | இராஜகிராமக் கடை ஒவ்வொன்றுக்கும் | 500 00 |
| 17. சுன்னாகம் | 1. மேல்மாடிக்கடை | 100000.00 |
| | 2. சந்தைக்கடை இல, 50 | 15000.00 |
| | 3. கருவாட்டுக் கடை இல.மீ.3 | 1600.00 |
| | 4. '' '' 4 | 1500.00 |
| | 5. '' '' 5 | 1800.00 |
| | 6. '' '' 6 | 1600 00 |
| | 7. '' '' 7 | 1800.00 |
| [கேள்வித் தொகையுடன் மேலதிகமான வாடகையும் செலுத்த வேண்டும்] | | |
| 18. கிளிநொச்சி | கிளிநொச்சி சந்தை | 150000,00 |
| 19. காங்கேசன்துறை | சந்தைக்கடை 2 | 3000,00 |
| [ஒவ்வொன்றுக்கும் ஒரேமுறையில் செலுத்தும் தொகை] | | |
| 20. கச்சாய் | கொடிகாமம் சந்தை சயிக்கிள் காலை | |

செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை.

யாழ். அபி சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1985-12-06.

[2270]


## ஆங்கில ஆசிரிய பயிற்சி வகுப்புகள் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் பின்போடப்பட்டுள்ளன. எதிர்வரும் 11ம், 17ம் திகதிகளில் நடைபெறவிருந்த இவ் வகுப்புக்கள் க.பொ.த [சாதாரணம்] பரீட்சை நடைபெறவுள்ளதனால் ஏற்பட்டுள்ள ஆசிரியர் பற்றாக் குறையினாலேயே பின்போடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் ஆங்கிலப்பிரிவு அறிவித்துள்ளது.

மானிப்பாய், வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை சாவகச்சேரி ஆகிய வட்டாரங்களுக்கு இம்மாதம் 21ந்திகதி முதல் 24ந் திகதிவரை யாழ், இந்து மகளிர் கல்லூரியில் காலை 8.30 மணிதொடக்கம் மாலை 4-30 மணிவரை இப் பயிற்சி நெறி நடைபெறவுள்ளது.

ஏனைய வட்டாரங்களுக்கான பயிற்சி நெறிகள் அடுத்த வருடம் முதல் தவணையில் நடைபெறும்.

## துக்கதினமாக அனுஷ்டிக்க கோரிக்கை

(சாவகச்சேரி]

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தினத்தை [டிசம்டர் 10ம் திகதி இன்று) அறவழிப் போராட்டக்குழு துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு தமிழ் மக்களை வேண்டியுள்ளது.

இத்தினத்தில் தமிழ் மக்கள் எந்தவித ஆடம்பர வைபவங்களையும் கொண்டாடாமலும், வீடுகள் வர்த்தக நிலையங்கள், வாகனங்கள் அலுவலகங்கள், மற்றும் பொது நிறுவனங்களில் கறுப்புக்கொடிகளைப் பறக்கவிடுமாறும், இளைஞர் யுவதிகள் அலுவலக உத்தியோகத்தர்கள் யாவரும் தமது ஆடைகளில் கறுப்புப்பட்டி அணிந்து கொள்ளுமாறும் அறவழிப் போராட்டக்குழு கோருகின்றது.

இப் போராட்டத்தினை, மக்கள் தமது கடமைகளை சீர்குலையாதவாறு துக்கதினமாக அனுஷ்டித்தல் முக்கியமானதாகும் எனவும் குழுவினர் கோரியுள்ளனர்.


சாவகச்சேரி
ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச் சாக்கு விற்பனை அறிவித்தல்

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 4282 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கு இருக்கிறது. கொள்வனவு செய்ய விரும்புவோர் தமது கேள்விகளை வைப்புப் பணம் ரூபா 300/-ம், கேள்விப் பத்திரப் பணம் ரூபா 10/ம் செலுத்தி சங்கத்தில் பெறும் படிவத்தில் 20-12-1985 வெள்ளிக்கிழமை பகல் 12-00 மணிக்குமுன் சங்கத்தில் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும். அல்லது சங்கத்திலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் இடவேண்டும்.

பொதுமுகாமையாளர்
(2267)


## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலைய பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு, எஸ். அலோசியஸ், செயலாவர் திரு. மயில்வாகனம், பொருளாளர் திரு வி உமாசங்கர், உபதலைவர் திரு க. கொலின், உபசெயலாளர் திரு. அ. சுகிர்தராசா, கணக்காய்வாளர் திரு. வே. சண்முகராசா, விளையாட்டுத் துறை: திரு. எம். வேலாயுதபிள்ளை, கலைத்துறை: இ. கனகரத்தினம். ஏழு பேர் செயற்குழுவிற்கு தெரிவாகினர். (க)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# பலாலி இராணுவ முகாமில் ஆறுபேர் விடுதலை

[மாவிட்டபுரம்]

பாதுகாப்புப் படையினரால் தரையிலும், கடலிலும் வைத்துக் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட ஆறு நபர்கள் பலாலி இராணுவ முகாமிலிருந்து விடுதலைசெய்யப்பட்டனர்.

மீன்பிடிக்கச் சென்ற சமயம் நடுக்கடலில் வைத்து இயந்திரப் படகு, மற்றும் மீன்பிடி உபகரணங்களுடன் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட மயிலிட்டி மீனவர்களான இ. வேலும்மயிலும், ஐ. நடராசா, கா. சடாச்சரம், நா. தர்மலிங்கம் ஆகியோரும், பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்த இளவாலையைச் சேர்ந்த எஸ். இராசேந்திரம், சுதுமலையைச் சேர்ந்த எஸ். கருணாகரன் ஆகியோருமே விடுதலைசெய்யப்பட்டவர்களாவர்.

காங்கேசன்துறை, பலாலி, யாழ். கோட்டை முகாம்களில் வைத்து விசாரணை செய்யப்பட்ட பின்னர் பலாலி இராணுவ முகாமில்வைத்து இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

# "மனித உரிமைகள் தினம் அர்த்தமற்றது!"

## மாணவர் அவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"தமிழீழப் பகுதிகளில் நாளாந்தம் தமிழ்பேசும் மக்கள் கொடூரமான இனப் படுகொலைக்கு உள்ளாகிவரும் இவ்வேளையில் மனித உரிமைகள் தினம் என்பதே தமிழ் பேசும் மக்களைப்பொறுத்தவரை அர்த்தமற்றதாகின்றது" என்று யாழ். பல்கலைக் கழக மாணவரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில்; "மனித உரிமைகளை நாளாந்தம் மீறிவரும் அரசு தன்னை சமாதானவிரும்பியாக வெளியுலகிற்கு காட்டமுனையும் இவ்வேளை, இவ்விரட்டை வேஷத்தினை அம்பலப்படுத்தும் வகையில் தமிழீழப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும். துக்கதினத்தோடு எம்மை இணைத்துக்கொள்வதினூடாக சர்வதேச அரங்கில் ஸ்ரீ லங்கா அரசினைத் தனிமைபடுத்தும் பணியில் ஒருபடி முன்னேறுவோம்" எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள தமிழ் மகளிர்அவை அகதிமுகாம்முன்பாக நடைபெறும். இந்நாளை கரிநாளாகக் கொண்டாடுமாறு தமிழ் மகளிர் அவை கோரியுள்ளது.

## இந்து மகளிர் மாணவிகள்

(யாழ்ப்பாணம்)

1985 ஆகஸ்ட் ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) பரீட்சையில் கூடுதல் புள்ளிகள் பெற்ற யாழ். இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகளில் இரு மாணவிகள் திறமையாகச் சித்திபெற்றுள்ளனர்.

செல்வி ஜெயசக்தி நடராசா ஒரு ஏ, மூன்று பி பெற்றுள்ளார். செல்வி ரஜனி ராஜேந்திரா ஒரு ஏ, இரண்டு பி, ஒரு சி பெற்றுள்ளார்.

## உதவிக்கு நன்றி

(யாழ்ப்பாணம்)

சங்கிலியன் புனர்வாழ்வுக் கழக அகதிகள் நிதிக்காக கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரியில் நடைபெற்ற கலை, கலாச்சார நிகழ்ச்சிகளின் போது தாராளமாக உதவிய பொதுமக்களுக்கும் யாழ் வர்த்தகர்களுக்கு அகதிகளின் சார்பாக உள்ளார்ந்த நன்றியை டாக்டர் எம். சக்திவேல் தெரிவித்துள்ளார்.

இந்நிதி அகதிகள் நலனுக்கு உதவும் பொருட்டு கலை, கலாச்சார அமைப்டாளர் திரு. பொன்னுத்துரையிடம் முகாம் பொறுப்பாளர் டாக்டர் பி. சசிதரன் முன்னிலையில் கையளித்துள்ளதாகவும் கூறினார்

## வற்றாப்பளையில் கைதான 15 பேரும் விடுதலை!

[முல்லைத்தீவு]

வற்றாப்பளைக் கிராமத்தைச் சீருடையினர் சுற்றிவளைத்துச் சோதனை நடத்தினார்கள்.

நந்தி கடல் மார்க்கமாகவும், வாகனங்கள் மூலமும் காட்டில் பதுங்கியிருந்த மற்றொரு குழுவினரும் சேர்ந்து வற்றாப்பளைக் கிராமத்தைச் சுற்றிவளைத்துச் சோதனை நடத்தினார்கள்.

சுமார் பதினைந்துபேர் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவுக்கு விசாரணைக்காக நந்திகடல் மார்க்கமாகக் கொண்டுசெல்லப்பட்டனர். தும்புத் தொழிலில் ஈடுபட்டவர்களும், முள்ளியவளைக் கள்ளுத்த வறணை ஊழியர்களும் இதில் அடங்குவர். விசாரணையின் பின்னர் அனைவரும் விடுதலைசெய்யப்பட்டனர்.

இதற்கு முன்னர் முள்ளியவளை, வற்றாப்பளைப் பகுதிக் காடுகளில் அதிகாலை முதல் மாலைவரை சீருடையினர் சோதனை நடத்தினர்.

அதிகாலை ஐந்து மணியளவில் பஸ்வண்டி மூலம் முள்ளியவளை - ஒட்டுசுட்டான் பாதை 8ம் கட்டைவழியால் வந்திறங்கிய சீருடையினர், ஐந்து மைல்களுக்கப்பால் கேப்பாபுலவுக்கும் - வற்றாப்பளைக்குமிடையில் இருக்கும் ஞானமூர்த்தி கோவிலடிக்கு மாலையில் வந்தடைந்தனர்.

முள்ளியவளை - கிச்சுக்குளம், வற்றாப்பளை ஆகிய இடங்களைச் சமீபித்த காடுகளில் அவர்கள் சோதனை நடத்தினர்கள். [க]

## ஈழம் செய்திப்பலகை

[யாழ்ப்பாணம்]

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர். எல். எவ்) வெளியிட்டுள்ள 'ஈழம் செய்திப் பலகை' சுவரொட்டியில் இன்று மனித உரிமைகள் தினத்தை அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அச்சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவு - தண்ணீர் முறிப்பில் விவசாயிகள் மீது வெறியாட்டம்: ஒருவர் படுகாயம்! ஏனையோர் காடுகளுக்குள் ஓட்டம்!

நாவற்குழி, உடுப்பிட்டி தொகுதியில் இராணுவ நடமாட்டம்: பொதுமக்கள் மீதும் துப்பாக்கி பிரயோகம்

இன்று மனித உரிமைகள் தினம்: ஒடுக்குமுறை ஆட்சியாளர்களால் உலகெங்கும் அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களை; உரிமைகளை வென்றெடுக்க போராடும் மக்களை; சுதந்திரத்திற்காகப் போராடி சுதந்திரம் மறுக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட ஈழப் போராளிகளை, உரிமைகளை பறிகொடுத்தவர்களை பறித்தெடுத்தவர்களை நினைவில் நிறுத்துவோம்.

---

## மரண அறிவித்தல்

### திரு. சந்திரசேகரம் சிவசுப்பிரமணியம்

கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சக்கடத்தார் சந்திரசேகரத்தின் மகன் சிவசுப்பிரமணியம் காலமானார். இவர் நெற்சந்தைப்படுத்தும் சபையின் ஓய்வுபெற்ற பிராந்திய முகாமையாளரும், (இராமநாதன் கல்லூரி) இளைப்பாறிய ஆசிரியை விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், சிவானி (கனடா), ஜீவகன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவிசுதனின் (கனடா) மாமனாரும், நிலாணியின் பேரனும், காலஞ்சென்ற சேனாதிராசாவின் சகோதரரும், திருமதி முருகையா சரஸ்வதியின் (கோண்டாவில் மகாவித்தியாலய உப அதிபர்) மைத்துனரும், திரு. முருகையாவின் (வங்கி முகாமையாளர் கொழும்பு) சகலனுமாவார். ஈமக்கிரியைகள் இன்று (10-12-85) செவ்வாய்க்கிழமை பகல் 12-00 மணியளவில் நந்தாவிலிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, கொக்குவில் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

[2283]

## மரண அறிவித்தல்

### திருமதி வாலாம்பிகைஅம்மாள்

திருமதி நடராஜக்குருக்கள் வாலாம்பிகை அம்மாள் காலமாகிவிட்டார். இவர்காலம்சென்ற நீர்கொழும்பு முத்துமாரி அம்மன்கோவில் நடராஜக் குருக்களின் மனைவியும், சிங்கப்பூர் சிவன்கோவில் கிருஷ்ணசாமி சர்மா, மகாதேவசர்மா, சோமாஸ்கந்தசர்மா, ராஜகோபாலசர்மா, சாவித்திரி, சாந்தா ஆகியோரின் அன்புத்தாயாரும், காலம்சென்ற ரங்கநாயகிஅம்மாள், காலம் சென்ற குமாரசாமிக்குருக்கள் [கைலாசபிள்ளையார் கோவில்], ஹேமா, பிருந்தா, இராமச்சந்திர சர்மா, ரேஸ், வத்சலா ஆகியோரின் மாமியாரும், காலம் சென்ற மனோன்மணி அம்மாள், திருநெல்வேலி ஜில்லா ஜானகிஅம்மாள், முன்னேஸ்வரம் இராஜேஸ்வரிஅம்மாள் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை [10 - 12 - 85] 9 மணிக்கு 107, கடற்கரை வீதி, நீர்கொழும்பில்இருக்கும் இல்லத்தில்இருந்து நீர்கொழும்பு பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
இராஜகோபாலசர்மா

[2285]

## மரண அறிவித்தல்

### குமாரசாமி சங்கரப்பிள்ளை

(பெரிய அரசடி, சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்னாள் கனிஷ்ட அதிபரும், சாவகச்சேரி வடக்கு இணக்கசபைத் தலைவருமாகிய குமாரசாமி சங்கரப்பிள்ளை 9 - 12 - 85 அன்று காலமானார். இவர் காலஞ் சென்ற குமாரசாமி சின்னுச்சிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், (யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்) ஆசிரியை சின்னம்மாவின் அன்புக்கணவரும், இராதா (ஆசிரியை டிறிபேர்க்கல்லூரி), இரஞ்சினி, இரவீந்திரன் (U.K), இரஞ்சன் (U.K), இரவிச்சந்திரன் (U. K), இரதிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சரவணபவனின் (நில அளவையாளர்) மாமனாரும், கிருத்திகா, பார்த்திபன் ஆகியோரின் அன்புப் பேரனும், திரு. கு. தில்லைநாதன் (ஆசிரியர், அமிர்தாம்பிகை வித்தியாலயம்), திருமதி அன்னலட்சுமி திசைநாயகம் (ஆசிரியை, இந்துக்கல்லூரி), காலஞ் சென்ற (நில அளவையாளர்) சுந்தரமூர்த்தி ஆகியோரின் அன்புச்சகோதரரும், திரு. மு. திசைநாயகத்தின் (கூட்டுறவு இலாகா, வவனியா) மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

பெரிய அரசடி,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்
மா. சரவணபவன்.

[2268]

## மரண அறிவித்தல்

### திரு. வி. தில்லைராசா

ஓய்வு பெற்ற உதவி புகையிரத மேலதிகாரி
(Commercial)

திரு. வி. தில்லைராசா 7-12-85 அன்று காலமானார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், திருமதி கமலாதேவி, திருமதி சரஸ்வதி, திரு. குலேந்திரன், திரு. லோகேந்திரன் (U. K.), திருமதி மகேஸ்வரி (கனடா), திரு. மகேந்திரன் (சவுதி), திரு. குகேந்திரன் (கனடா), திருமதி மேனகாதேவி (U. K.), திருமதி தவமணி இவர்களின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற சட்டத்தரணி (J.P.U.M) திரு. அமிர்தலிங்கம், திரு. மகாலிங்கம் (State Bank of India), திருமதி தமயந்தி (U. K.), திரு. இராமநாதன் (கனடா), திருமதி நீற்று (கனடா), Dr. குணசிங்கம் (U. K.), காலஞ்சென்ற திரு. பிரேமச்சந்திரகுமார் (என்சினியர்) இவர்களின் அன்பு மாமனாரும், திருமதி அருந்ததி குணசீலன், ஆனந்தலிங்கம், இந்திரலிங்கம், திருமதி சிறீதேவி ஜெயமோகன், சிறீராஜ், சிறீரஞ்சனி, சீத்தா, ரமணி, ரஜனி, ரதனி, பிரதீப், ரதிப், குமாரபரதன், சிவானி, சிறீஸ்காந்தன், தனுகாந்தினி இவர்களின் அன்புப் பேரனும், திரு. திலராயர் (J. P.), திலகம்மா இவர்களின் அன்புச் சகோதரரும், சி. தர்மரட்ணம் (J. P.), திருமதி ஞானரட்ணம் (கனடா) இவர்களின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளின் விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

"திலக வாசா",
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
சுன்னாகம்.

[2263]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram, Eelanadu, Telephone: 22389-24126.